

எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATI

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

கனவு 10 கற்பனை 1] ஆண்டு மலர் 15-1-67 [விலை 25 கா

19 JAN
MADRAS

2469

164260
031m211,N58
K7

எங்கும் பொங்கல்!

—: சந்தக் கவிமணித் தமிழழகன். :—

பொங்கல் நல்ல பொங்கல்!—சுவை
பொங்கும் வெல்லப் பொங்கல்!

மங்க லத்தை முன்னாள்—நெய்
மணக்கும் இன்பப் பொங்கல்!

புதிய சம்பாப் பொங்கல்!—செந்நெல்
போற்றிச் செய்த பொங்கல்!

மதியும் வாழ்வும் வேண்டி—நாம்
மகிழ்ந்து வைத்த பொங்கல்!

காளை மாட்டுப் பொங்கல்!—பசு
கன்றின் வீட்டுப் பொங்கல்!

நீள நெடுங் கண்ணார்—கைகள்
நேர்த்தி செய்த பொங்கல்!

பனங்கி ழங்குப் பொங்கல்!– வகைப்
பழங்கு விக்கும் பொங்கல்!

மனங் கொழிக்கும் பொங்கல்!—வாழ்வை
மலர வைக்கும் பொங்கல்!

மஞ்சட் கொத்துப் பொங்கல்!—கன
மருக்கொ ழுந்துப் பொங்கல்!

இஞ்சிக் கொத்துப் பொங்கல்!—மக்கள்
இதயம் விம்மும் பொங்கல்!

பொங்க லோபாற் பொங்கல்! தைப்
பொங்க லோபாற் பொங்கல்!

'எங்கெங் குமே இன்பம்!'—என
எதிரொலிக்கும் பொங்கல்!

உங்கள் அனைவருக்கும் எங்களது உளங்கனிந்த

பண்டிகை வாழ்த்துக்கள்

உங்கள் அபிமானமும் ஆதரவும் பெற்ற

மபத்லால் க்ரூப் மில்ஸ்ஸாரின்

அனுமதி பெற்ற சில்லரை விற்பனை நிலையம்

P.R.N. டெக்ஸ்டைல்ஸ்

440—441 பெரியகடை வீதி, திருச்சிராப்பள்ளி-8.

164260

நீங்கள் விரும்பும் :

புல் வாயில், லினோ, 2X2
பாப்ளின் ரகங்கள், உயர்ந்த ரக
பிரிண்டட் பாப்ளீன்,
கேம்பிரிக்கள், சூட்டிங்,
ஷர்ட்டிங் ரகங்கள்
பல ரகங்களில் கிடைக்கும்.

★

சிறந்த இடம் :

டெரிகாட்டன், டெபிலஸ்டு,
மாபினிஸ்ட், ஸான்பொரைஸ்டு
முதலிய உயர்ந்த ரகங்கள்
நீங்கள் விரும்பி வாங்கத்
தகுந்தவைகள்.

திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு சேலம் ஆகிய மாவட்டங்களில்

மபத்லால் க்ரூப் மில்ஸ்

அனுமதி பெற்ற சில்லரை விற்பனை நிலையம் இது ஒன்றே.

எழுத்தாளன்
தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை
EZHUTHALAN
TAMIL & ENGLISH MONTHLY
WRITERS' OWN PUBLICATION

உயிர்களெலாந் தெய்வமன்றிப்
பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவும்
நேரே தெய்வம்
இயலுகின்ற ஜடப்பொருள்க
ளனைத்தும் தெய்வம்
எழுதுகோல் தெய்வம்
இந்த எழுத்தும் தெய்வம்,

CONNE
19 JAN
MADRAS

உண்மை ஒளி

ஒன்பது ஆண்டுகள் முடிந்து பத்தாவது ஆண்டு எழுத்தாளனுக்குத் தொடங்குகிறது. தமிழர் திருநாளாகிய தைப்பொங்கல், தமிழ் எழுத்தாளனுக்குப் பிறந்த நாள் விழாவாக அமைந்து விட்டது. எழுத்தாளன் மகிழ்ச்சியில் பிறந்த குழந்தை. பூரிப்பில் தொண்டு செய்யும் பிறவி. தமிழ் மக்களது நல்லாதரவில் ஒன்பது ஆண்டுகளாக நல்லதைப் பேசி, நாட்டு மக்கள் நன்மக்களாக, நல்ல நிலையில் வாழவேண்டுமென்ற விருப்பத்தை சுட்டிக் காட்டிக்கொண்டே யிருப்பவன் எழுத்தாளன்.

தமிழ் மக்கள் அனைவரது அன்பும் ஆதரவும், தமிழக சிந்தனையாளர்களின் பராமரிப்பும் எழுத்தாளனுக்கு உண்டு என்பதைக் காட்டிவரும் அந்த பெருமக்களுக்கெல்லாம் இந்த நல்ல நாளில் அஞ்சலி செலுத்துகிறான். தனது பொங்கல் வாழ்த்தை மனப்பூர்வமாக அனைவருக்கும் அறிவித்துக் கொள்ளுகிறான்.

உடல் இருக்கிறது. உடலில் மூக்கு, காது, கண் இவை ஒரு வடிவம் உடையன. ஆனால் உருவம் எதுவும் இல்லாத, உடலில் எங்கு இயங்குகிறது என்பதை மனிதனே அறியாத, ஒரு அமைப்புக்கு உள்ளம் என்று பெயர். உருவமேயில்லாத உள்ளம் மனித உடலை இயக்குகிறது.

அந்த உள்ளத்தின் சிறப்பால் மனிதன் உயருகிறான். அல்லது தாழ்வு அடைகிறான். உள்ளத்தில் விளக்கம் பெற்று அதன் தன்மையை பூர்ணமாக அறிந்தவன் அறிஞன். அறியாதவன் அறிவிலி என்ற பட்டம் பெறுகிறான்.

“உள்ளமே உலகம். ஏறு ஏறு மேலே, மேலே” என்கிறார் பாரதியார். உள்ளம் ஒன்று இருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் அதன் இயல்பை, அறிந்தால்தான் அதனை அடக்கி வெற்றிப் பாதைக்குத் திருப்ப முடியும். உள்ளத்தைத் தன் வசமாக்கி அதனை தன் அறிவின்படி இயங்க வைப்பதுதான் வாழ்க்கை.

உடலில், உள்ளம் என்ற ஒரு அமைப்பு உருஇல்லாத ஒரு படைப்பு இருந்து இயக்குவது போல, பரந்த இந்த உலகில், இறைவன் என்ற ஒரு சக்தி, இயற்கை அனைத்திலும் இருந்து இயக்குகிறது. உள்ளத்தைப் புரிந்து கொண்டால் உலகத்தைப் புரிந்து கொள்ளலாம். உள்ளத்தைப் புரிந்து கொள்ளவே இந்த உழவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. உடலுக்கு இனிமையான பொங்கலை உண்டு, உள்ளம் மகிழ திருநாள் கொண்டாடி மகிழ்வதோடு, உள்ளமும், உள்ளத்தைப் போல இறைவனும் இருக்கிற உண்மையை ஒவ்வொருவரும் உணருதல் பொங்கல் திருநாளின் தனிச் சிறப்பு ஆகும்.

நமது வாழ்வில், மிருகங்கள் கூட, பறவைகள் கூட, இறைவனுக்குத் தொண்டு செய்து பெருங்கீர்த்தியும், முக்தியும் அடைந்ததாக பற்பல வரலாறுகள் உண்டு. அவை யாவும், மனிதன் முயன்றால் உள்ளத்தைப் புரிந்து கொண்டு உலகத்தைப் புரிந்து கொள்ளலாம் என்பதை எடுத்துக் காட்ட அமைந்த செய்திகள்.

“உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்
பள்ளத்தில் விழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவிகொள்வார்”

என்று பாரதியார் பாகான செந்தமிழில் தெளிவாகச் சொல்லுகிறார். தமிழ் மக்கள் அனைவரது உள்ளத்திலும் உண்மை ஒளி உண்டாகவேண்டுமென்று இந்த நல்ல நாளில் உடலில்லாமல், எல்லாவற்றிலும் உட்கலந்து அனைத்தையும் இயக்கும் பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி,
ஆசிரியர்.

தேர்தலும் – நமது கடமையும்

★

டி. எல். பஞ்சாபகேசன்

பாரத நாட்டை பல நூறு ஆண்டுகள் அன்னியர்கள் ஆட்சி செலுத்தினார்கள். அதன் விளைவால் இந்நாட்டின் பொருளாதாரம் மட்டும் பாதிக்கப்படவில்லை. சிந்தனா சக்தியையும், அடியோடு நாம் இழந்து நின்றோம். சிந்தனா சக்தியுடைய ஒரு சிலருக்கு செயலாற்றும் உரிமை அன்னியர்கள் வழங்கவில்லை. அதனால் சோம்பேறிகளாகவும், கல்வி அறிவு இல்லாதவர்களாகவும், வேலையற்ற சோம்பேறிகளாகவும் பாரத மக்கள் இருந்து வந்தார்கள். இதை நன்குணர்ந்த நம் தலைவர்கள் துணிந்து, பல ஆண்டுகள் போராட்டம் நடத்தி, தூங்கிக் கொண்டிருந்த மக்களை விழிப்புணர்ச்சி அடையச் செய்து, அவர்களின் பலத்தால் இந்நாட்டை "சுதந்தர நாடாக"ச் செய்தார்கள்.

நாடு விடுதலை அடைந்தவுடன் "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற பாரதியின் வாக்கின்படி மக்களுக்கு அரசை அமைக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது முதன் முதலில். உலகமே கண்டு வியக்கும் அளவுக்கு, வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்க, பாரத அரசு சுதந்திரம் பெற்றவுடன் அரசியல் சட்டத்தை ஏற்படுத்தினார்கள். நாடு விடுதலை பெற்றவுடன் சிறிது காலத்துக்கு சர்வாதிகார ஆட்சிதான் மற்றைய நாட்டில் நடைபெற்றிருக்கிறது. நாட்டை ஓர் நிலைக்கு உயர்த்தும் வரை மக்களுக்கு வாக்குரிமை வழங்க எந்நாடும் துணிந்ததில்லை. ஆயினும் அதற்குமாறாக, சற்றும் யோசியாது விடுதலை தேடித்தந்த நம் தலைவர்கள் வயது வந்தோர் அனைவரையும் வாக்குரிமையாளர்களாகச் செய்து அவர்களின் ஒத்துழைப்பால் அரசை அமைத்தார்கள். பாரதியின் வாக்கு மெய்வாக்காக பரிணமிக்க ஆரம்பித்தது.

விடுதலைக்குப் பின் நம் நாட்டில் மூன்று முறை பொதுத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாண்டு ஆரம்பத்தில் நான்காவது முறையாக பொதுத் தேர்தல் நடைபெறும் நேரத்தின் நுழைவு வாயிலில் நாம் நின்று கொண்டிருக்கின்றோம். இப்பொழுது நமக்கு உள்ள பொறுப்பும், கடமையும் அதிகம். மக்களை நல்ல வகையில் சிந்திக்கச் செய்வது சிந்தனையாளரின் கடமையாகக் கொள்ள வேண்டும். நல்ல சிந்தனை எங்கிருந்து வந்தாலும் அதை ஏற்று பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களைச் சிந்திக்கச் செய்து செயலாற்ற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது பொறுப்புள்ள அரசியல் கட்சிகளின் கடமையாகும்.

நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தல்களும் மூன்று விதமான எதிர்ப்புகளிடையே நடைபெற்றிருக்கின்றன. முதன் முதலில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நின்று, அன்னியர்கள் ஆட்சிக்கு உறுதுணையாக இருந்து வந்தவர்கள், தங்கள் எதிர்ப்பைக் காட்டி, இருக்கும் இடம் தெரியாமல் மறைந்தார்கள். இரண்டாவது முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில், பதவி கிடைக்காத காரணத்தாலும், காங்கிரஸின் மீது வெறுப்புற்றதின் பயனாலும் சிலர் தனித்து நின்றும், சிலர் கட்சிகளை புதிதாக உருவாக்கியும் தேர்தல்களத்தில் குதித்து ஓரிரு இடங்களில் வெற்றியும், பல இடங்களில் தோல்வியும் கண்டார்கள். அவர்களுக்கு பல கட்சிகள் துணை நின்றன அச்சமயம். பல கட்சிகளின் ஆதரவால் ஓரிரு இடங்களில் வெற்றி கண்ட சிலர் அரசுக்கு எதிரிடையான தீயசக்திகளை நாட்டில் பரப்பி வந்தனர். மூன்றாவது முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதல் இரண்டு முறை நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்ற சுயேச்சை வாதிகளையும், சுலநலமிகளையும் மக்கள் தேர்வு செய்யவில்லை. அதற்குமாறாக கட்சிகளின் சார்பாக நின்ற சிலரை சில இடங்களில் தேர்ந்தெடுத்தனர்.

நடுவில் நடைபெற்ற இரண்டாவது மூன்றாவது தேர்தல்களில் மக்கள் உணர்ந்து வாக்களித்தார்களா என்றால் இல்லை. பண பலத்தாலும் படை பலத்தாலும் தான் நடைபெற்றன இரண்டாவது மூன்றாவது தேர்தல்கள்.

பாரத நாட்டு மக்கள் விடுதலைக்குப் பின் நல்ல விழிப்புணர்ச்சியை பெற்று வருகின்றனர் என்பது உண்மையே. ஆயினும் தங்கள் வாக்குகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனா சக்தியை முழுதும் பெறமுடியாமல் இன்றும் இருந்து வருகிறார்கள் நம் மக்கள் என்பதை நினைக்கும்போது, சிந்தனையாளன் வருத்தப்பட வேண்டியவனாகயிருக்கிறான்.

இன்று நாட்டில் உள்ள கட்சிகள் அனைத்தும் தேர்தல் களத்தில் குதித்துள்ளன. இவர்கள் மக்களை முதலில் மதித்து அவர்களின் அன்பாலும், அறிவாலும் தங்களுடைய வாக்குகளை வழங்க மக்களிடம் பிரசாரம் செய்ய வேண்டும் என்ற லட்சியத்தை முதன்மையாகக் கொள்ள வேண்டும். பண பலத்தாலோ, படை பலத்தாலோ, வசைமாரி பொழிந்து மக்கள் மனதை மாற்றி வாக்குகள் பெறுவது என்னும் நிலையை மாற்ற கட்சிகள் அனைத்தும் முன் வரவேண்டும் என்று சிந்திக்கின்றான்

எழுத்தாளன்

சிந்தனையாளன். தேர்தலில் நிற்கும் கட்சிகள் அனைத்தும், தாங்கள் தேர்தலில் நிற்கும் நோக்கங்களும், செயலாற்றவிருக்கும் திட்டங்களும் மக்கள் மனதில் பதியும்படி அறிக்கைகள் விடலாம். பிரசாரம் செய்யலாம். தனிப்பட்ட முறையில், வேட்பாளர்கள் ஒருவருக்கொருவர் வசைமாரி பொழிந்து கொள்வது பண்பாடற்ற செய்கை என்பதை வேட்பாளர்களும், தேர்தல் கட்சிகளும் உணரவேண்டும். யாராகயிருந்தாலும் வசைமாரி பொழிந்து கொள்வது சட்ட விரோதம் என்பதை அரசாங்கம் பிரகடனப்படுத்தி, வசைமாரி பொழியும் சொற்பொழிவாளரையும், வேட்பாளரையும் உடனுக்குடன் தண்டனைக்குள்ளாக்க ஏற்பாடு செய்ப வேண்டும் அரசாங்கம். ஆரம்ப காலத்தில் அரசாங்கம் கண்டிப்பாக இல்லாவிட்டால் தேர்தல் நடைபெறும் நேரத்தில் மக்களிடையே வீண் குழப்பங்களும், பீதியும் ஏற்பட்டு சில இடங்களில் தேர்தல் நடைபெறாமல் தடைபடவும், வாக்குச் சீட்டுகள் முழுதும் பதிவாகாமல் போகவும் கூடும். வாக்குச் சீட்டுக்கு பணம் கொடுத்து வாக்குகளைப் பெறும் வழக்கத்தை வேட்பாளர்கள் கைவிடவேண்டும். பணம் பெற்று வாக்களிக்கும் மனப்பான்மையை மக்களிடமிருந்து போக்க சொற்பொழிவாளர்கள் சொற்பெருக்காற்ற வேண்டும்.

சிந்தனையாளனும் எழுத்தாளனும் விரும்புவது, நல்ல முறையில் நாடு நலமுடன் வாழ, நல்ல அரசு அமைதியாக அமையவேண்டும் என்பதேயாகும். பணத்திற்கோ, படைபலத்துக்கோ தங்கள் பொன்னை வாக்குகளை வழங்காமல் நேர்மையுடன் இத்தேர்தலில் மக்கள் தங்கள் வாக்குகளை வழங்க முன்வர வேண்டும் என்று எழுத்தாளன் வேண்டிக்கொள்கிறான்.

பக்தியுடையார் காரியத்திற்
  பதறார், மிகுந்த பொறுமையுடன்

வித்துமுளைக்குந் தன்மைபோல்
  மெல்லச்செய்து பயனடைவார்

என்ற பாரதியின் வாக்கின்படி வேட்பாளர்களும், தொண்டர்களும், சொற்பொழிவாளர்களும், தீயசக்திகளையும் பொய்ப் பிரசாரங்களையும் மக்களிடையே பரப்பாமல், நேர்மையில் நின்றால் மக்கள் நல்ல தீர்ப்பு அளிப்பார்கள். நாடும் நலமுறும்.

164260
O31m 2.11, N58
K7

* * *

மேனியெழிலை அள்ளி அளிக்கிறது

மேட்டூர்
சந்தன
சோப்



நாள் முழுவதும் சந்தன நறுமணம் நீடித்து
நிற்கச் செய்யும் உன்னத சோப்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-613

எமது
பொங்கல்
நல்வாழ்த்துகள்

இந்தப் பொங்கல் திருநாளன்று
ஒவ்வொருவர் மகிழ்ச்சியும் பொங்கி வழியட்டும்.
அப்பொழுது நீடித்து உழைக்கும் அழகு ஆடைகளை
எப்பொழுதும் திறமையுடன் நெய்து கொடுக்கும்
நெசவாளர்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
உங்கள் பணத்திற்கான முழு மதிப்பையும்
கோ-ஆப்டெக்ஸ் துணிகள் இப்பொழுதும்,
எப்பொழுதும் அளிக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி துணிகள்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
34/1-A, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8.

ELEGANT

சகாப்தத்தின் சின்னங்கள்

வானுயர்ந்த கோபுரங்களும், புனிதம் தவழும் கோயில்களும் வரலாற்றுக்கும் கலாசாரத்திற்கும் சின்னங்களாக விளங்குகின்றன. ஒவ்வொரு சமுதாயமும் தனது பின் சந்ததக்கு நினைவுச் சின்னங்களை விட்டுச் செல்கிறது. தங்கள் முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையையும், அதன லட்சியத் துடிப்பையும் இவற்றில் கண்டு மக்கள் எழுச்சியும் மகிழ்ச்சியும் கொள்கின்றனர். அவற்றைக் கருவூலங்களாகப் போற்றிப் பாதுகாக்கின்றனர்.

இந்தத் தலைமுறையில் நாம் தேடி வைத்த கருவூலம் சுதந்தர பாரதம். நாட்டின் எதிர்கால சந்ததியினர் இதை மட்டுமா சுவீகரிக்கப் போகிறார்கள்? நாம் கட்டியுள்ள அணைகள், பெரிய தொழிற்சாலைகள், விஞ்ஞான — தொழில் நுட்பக் கூடங்கள் முதலிய அனைத்தும் அவர்களுக்குச் சொந்தம். இவை நமது சகாப்தத்தின் சின்னங்கள்.

நவீன வசதிகளுடன் கூடிய விதவிதமான ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை, மின் சக்தியும் ரசாயன உரமும் 'லீக்கோ' கரியும் வழங்கும் நெய்வேலி நிலக்கரித் தொழிற்சாலை, நாட்டின் பாதுகாப்பிற்கு அரண் போன்ற ஆவடி டாங்க் தொழிற்சாலை, திருச்சி துப்பாக்கி தொழிற்சாலை, உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை, கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை, நந்தம்பாக்கம் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை, உதகை கச்சா பிலிம் தொழிற்சாலை போன்றவை தமிழ்நாட்டின் உயர்வுக்குச் சான்று.

கரம்பைக் கழனியாகவும், பொட்டல் வெளியைத் தொழில் கேந்திரமாகவும் மாற்றியமைத்து மாறுதலைத் தோற்றுவித்துள்ளோம். இவற்றைச் சுவீகரிக்கும் எதிர்கால சந்ததியினர் இன்னும் பல சாதனைகளைப் பொறித்து, நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக்குவார்கள் என்பதில் என்ன ஐயம்? அவர்களை அபிவிருத்திப் பாதையில் ஊக்கி உத்வேகப்படுத்தும் வகையில் நமது சகாப்தத்தின் சின்னங்கள் திகழ்கின்றன.

(தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை நெறியாளர் வெளியிட்டது)

“ஜனவரி ஜாலி”

* * *

சொனா. முனா.

எதன் பேரைச் சொல்லியாவது ஜாலிபண்ண வேண்டும்! இதுதான் பட்டணத்தில் வசிக்கிற ஜனங்களில் பெரும்பலரின் எண்ணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஜனவரி மாதம் முதல் தேதி—எல்லா நாட்களையும் போல் அதுவும் ஒரு நாள் தானே! ஆனால் பெரும்பாலோர் அப்படி எண்ணவில்லை. ‘வெள்ளைக்காரன்’ புகட்டிவிட்ட அழிக்கமுடியாத நம்பிக்கைகளில் ஜனவரி முதல் நாளின் மகாப் பெரியதனமும் ஒன்று ஆகும்.

வெள்ளைக்கார ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில், ‘புதுவருஷப் பிறப்பு’ என்றால் ஏக அமர்க்களமாக இருக்கும். துரைமார்களைப் ‘பார்ப்பதற்காக’ கறுப்புத்துரைகள் பூமாலைகள் எலுமிச்சம்பழம் முதலிய ‘பிரசண்டுகள்’ வாங்கிக் கொண்டு போவதும், அக் ‘கறுப்புத்துரை’களைப் பார்க்க சில்லறை ஆசாமிகள் காணிக்கைகளோடு காத்திருப்பதும் அந்தக் காலத்திய ‘யுகதர்மம்’ ஆக விளங்கியது.

கிறிஸ்துமஸ் வருவதற்கு முன்னரே, நகரங்கள்—கிறிஸ்துவர்களும் வெள்ளைக்காரர்களும் வசித்த நாகரிக ஊர்கள்—விழாக்கோலம் பூண்டு விடும். கலர் காகிதங்களுக்கும், மெழுகு வத்திகளுக்கும் திடீர் டிமாண்டு ஏற்படும். காலண்டர்களும், டயரிகளும் இந்தக் காலத்தைப் போல் மலிவுப் பொருள்களாகச் சீரழிந்ததில்லை.

ஜனவரிப் பண்டிகையின் முக்கியத்துவமே ‘தண்ணி போடுவது’ தான் என்று எண்ணியவர்கள் ரொம்பப் பேர். வசதி உள்ளவர்கள் சீமைப்புட்டிகளை நாடினார்கள். மற்றவர்கள் நாட்டுச் சாராயம், கள்ளு வகையராக்கள் மூலம் களிப்பு மிகப் பெற்றார்கள்.

சென்னை மாநகரத்தில் குடிக்க வகைசெய்த நாகரிக பவனங்கள் மவுண்ட் ரோட்டில் அநேகம் இருந்தன. கள்ளுக்கடைகளும் மிக முக்கியமான இடங்களில் அமைந்திருந்தன. அதனால், குடித்துவிட்டுக் கூச்சலிடுவோரையும் தள்ளாடித் தடுமாறி நடப்பவர்களையும் பண்டிகை தினங்களில் மிகுதியாகக் காணமுடிந்தது.

இப்போது உயர்ந்தரக மது தினுசுகள் தாராளமாகக் கிடைப்பதில்லை. ‘திருட்டுச் சாராயம்’ குடிப்பவர்கள் குடித்துவிட்டு கலாட்டா பண்ணிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

குடித்துவிட்டு ஆசாமிகள் அலைகிற அலைச்சலையும், படுகிற அவஸ்தைகளையும் பார்த்தால் ‘இதில் என்ன ஜாலி இருக்கிறதோ!’ என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், நான் வாழ்வின் இனிமைகளை ரசித்து மகிழக் கற்றுக் கொள்ளாத அப்பாவி என்று எனது நண்பர்கள் ‘சர்டிபிகேட்’ கொடுத்திருக்கிறார்கள்.

அது கிடக்கட்டும். ‘ஜனவரி ஜாலி’ பற்றி அல்லவா சொல்ல ஆரம்பித்தேன்!

இந்த வருஷம் ஜனவரி முதல் தேதி காலை ஏழு மணிக்கு சென்னை ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு ஒரு தனி நபரின் ஜனவரி ஜாலியைக் காணக் கொடுத்து வைத்திருந்தது!

நாகரிகமான ஆசாமிதான். படித்தவர்தான். ஏதோ ஒரு அலுவலகத்தில் பணிபுரிகிறவராக இருக்கவேண்டும். வெள்ளைக்காரன் காலத்துப் பண்டிகைப் பண்பாடு அவரைப்பிடித்து ஆட்டி வைத்தது போலும்! அவர் ஆடி, தடுமாறி, அந்த ஆள் மீதும் இந்த ஆள் மீதும் மோதிக் கொண்டு நடந்தார். ஆளைப்பார்த்தால் டிப்-டாப்! விலை உயர்ந்த ஆடைகள், பூட்சு இதுக்கெல்லாம் குறைச்சல் இல்லை. அதே ரோட்டில் அவர் தினசரி கௌரவமாக நடந்து போய் வந்திருக்கலாம். அப்போது அவரை யாரும் விசித்திரமாக நோக்கியிருக்கமாட்டார்கள் இப்போது எல்லோரும் அவரையே வேடிக்கை பார்த்தார்கள்.

என்ன இது, ஏதோ நரம்புக் கோளாறோ என்று எண்ணியவர்கள் கூட, எளிதில் விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள். ‘ஓகோ, ஜனவரி ஜாலியா?’ என்ற கூச்சல் பிறந்தது! ‘ஓவர். பாட்டில் ஓவராக உள்ளே போயிருக்குது’ என்று சிலர் கத்தினார்கள்.

ஜாலி பிரதர் இந்த உலகத்திலேயே நடை போடவில்லையே. காற்றில் மிதப்பதாகவோ, ககன சஞ்சாரம் செய்வதாகவோ எண்ணியிருக்க

லாம் அவர். தந்திக் கம்பத்தை உதவிக்கு அழைத்தார். பஸ் ஸ்டாண்டுத் தூணைத் துணையாக்க முயன்றார். முயற்சி தோல்வியுற்றுக் கீழே விழுந்தார்.

அவரைப் பார்க்கவே பரிதாபகரமாக இருந்தது. அவருக்கு உதவி புரிய சில பரோபகாரிகள் விரைந்தார்கள். அவர்களுக்கு ஆலோசனை கூற 'ஐடியா வள்ளல்கள்' முன்வந்தார்கள். 'டாக்சியிலே ஏற்றி அனுப்பு!' 'ஆட்டோ ரிக்ஷாவில் இட்டுக்கினு போ!' இப்படி யோசனைகள் உருண்டன.

இந்த ரக ஆசாமிகளுக்குப் பட்டணத்தில் குறைவே கிடையாது. கும்பல் கூடவும், பரோபகாரம் புரியவும், இலவச யோசனைகளை அள்ளி வழங்கவும் ஏகப்பட்ட பராபரங்கள் எங்கும் நிறைந்த ஆனந்தங்களாகக் காட்சி தருவார்கள்.

'ஜனவரி ஜாலி' அனுபவித்த ஆசாமியின் அவதியைப் பார்த்தபோது, 'இதில் என்ன இன்பம் இருக்கிறதோ? என்ன எழவு ஜாலியோ இது!' என்று எனக்குத் தோன்றியது தெருவே சிரிக்கும்படி தனது கௌரவத்தை இழந்து திரிவதில் என்ன சந்தோஷத்தைக் காணமுடிகிறது இந்த மனிதனால்? நாளை இவன் 'கால், கை மேலு எல்லாம் ஒரே நோவு' என்று படுக்கையில் கிடப்பான்; அதில் தான் என்ன சுகம் இருக்க முடியும் என்று என் மனம் கேட்டது.

வெள்ளைக்காரர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்கள் புரியாமலே செயலாற்றுகிறார்கள். ஹிப் ஹிப் ஹுரே என்று கத்துகிறார்களே அதை உதாரணமாகச் சொல்லலாம். அப்படிக் கத்துவதில் என்ன வேடிக்கை இருக்கிறதோ புரியவில்லை. ஒருவேளை அவனைப்போல் குடித்துவிட்டு, தொண்டையில் விக்கும்படியாக நாமும் ஹிப் ஹிப் ஹுரே கத்தினால் அதன் மகிமை நமக்குப் புரியுமோ என்னவோ!—இந்தக் கருத்தில் ரசிகமணி டி. கே. சி. சில வரிகள் எழுதியிருக்கிறார்.

ஜனவரி ஜாலி பற்றியும் எனக்கு அப்படித்தான் தோன்றியது. அதன் மகத்துவத்தை, அதனால் கிட்டக்கூடிய ஆனந்தத்தை, தன்னை மறந்த இன்ப போதையில் கிட்டுகிற சுகத்தை அனுபவிக்க விரும்புகிறவர்கள் குடித்துவிட்டு ரோட்டில் உருளவேண்டுமோ என்னவோ!

இந்த எண்ணம் எழவும் 'நல்ல நாகரிகம் தான் போ!' என்று கனைத்தது என் மனக்குறளி.

"பொங்கல் திருநாளில் எங்கள் வியாபாரிகளுக்கும் வாடிக்கைக்காரர்களுக்கும்
எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்"

போன் நெ 2233 & 2933.
தலைவர் : போன் நெ. 4623,
தந்தி : "சொசைட்டி"
ஸ்தாபிதம் : 1938.

சிறந்த கைத்தறி ஜவுளிகளுக்கு
"சேலம் அம்மாப்பேட்டை சொசைட்டி ரகங்களே"

★ புதுமையான டிசைன் சேலைகள்,
★ சோளி பீஸ் ரகங்கள்,
★ வேட்டிகள், குண்டஞ்சு, பாவாஞ்சு,
★ ஜரிகை அங்கவஸ்திரங்கள், ஜரிகை வேட்டிகள்,
★ நவீன ரக பெட்ஷீட்டுகள்,

மற்றும் உங்களுக்குத் தேவையான கைத்தறி ஜவுளிகள் எல்லாவிதமான டிசைன்களிலும், எல்லா கெஜங்களிலும் கிடைக்கும்.

சென்னை தியாகராய நகர் விற்பனை டெப்போ,
9, உஸ்மான் ரோடு, டி. நகர், சென்னை-17.
போன் எண். 41723

ஏ. மாரியப்பன், தலைவர்,
அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி
லிமிடெட், எண். 532, அம்மாப்பேட்டை, சேலம்-3.

குறிப்பு:—எங்கள் ஜவுளிகள் எல்லா "கோவாப்டெக்ஸ்" எம்போரியங்களிலும், ஹேண்ட்லூம் ஹவுஸ்களிலும், மற்றும் எங்கள் டெப்போக்களிலும் எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இன்பம் எங்கும் பொங்கட்டும்!

எம். பி. நாச்சிமுத்து, பி. ஏ., பி. எல்.,
தலைவர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்.

தமிழர் பண்டிகைகளில் எல்லாம் தனிச் சிறப்பு வாய்ந்த பொங்கல் பண்டிகையை நாம் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறோம். பண்டிகைகளில் இப்பொங்கலுக்கு மட்டும் தனிச் சிறப்பு ஏன் ? இது அமுது படைக்கும் உழவர் பெருங்குடி மக்களின் தனி நாள் ; உலகத்தைத் தங்கள் பின்னே வரச்செய்யும் உழு தொழில் மக்களின் திருநாள். உழுது பயிரிட்டு, களையெடுத்து, அறுவடைகண்டு உலகோர்க்கு அமுது படைக்கும் உழவன் கொண்டாடும் இத்திருநாள், பண்டிகைகளிலெல்லாம் தனிச் சிறப்புடைய நாளாக விளங்குவதில் ஆச்சரியம் இல்லைதான் !

இத்திருநாளில் உழுது பயிரிட்டு உணவளிக்கும் உழவனுக்கு நாம் நன்றி சொல்லுகிறோம். ஆனால் அவனோ தன்னோடு இரவு பகல், பனி, வெயில் என்று பாராமல் உழைத்த கால்நடைச் செல்வங்களுக்கு நன்றி கூறுகிறான். ஆக, நன்றி கூறும் திருநாள் தான் பொங்கல் பண்டிகை.

உணவு, உடை, உறையுள் இம்மூன்றும் மனிதனுக்கு இன்றியமையாத தேவைகள். உணவு தரும் உழவனுக்கு நன்றி கூறும் போது உடைதரும் நெசவாளியை யார் மறக்க முடியும்! உழவுக்கு அடுத்த தனிப் பெரும் குடிசைத் தொழிலான நெசவுத் தொழிலில் இந்த நாட்டில் நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஒன்றரைக் கோடி மக்கள் ஈடுபட்டு, இந்த நாட்டின் துணித் தேவையில் மூன்றில் ஒரு பங்கை ஈடு கட்டி வருகின்றனர். உணவில்லாமல் ஒரு நாள் என்ன ஒரு வாரம் இருக்கலாம் ; உடையில்லாமல் ஒரு விநாடி இருக்க முடியுமா? முடியாதே! அத்தகைய ஆடை தரும் நெசவாளர்களை, உழவர்களுக்கு அடுத்த படியாக மக்கள் நினைக்க வேண்டாமா?

வயிற்றுக்கு உணவு தருகிறான் உழவன். அவன் மண்ணைக் கிளறும் கலைஞன், கண் கவரும் ஆடை தரும் நெசவாளியும் ஒரு கலைஞனல்லவா? வழி வழி வரும் அந்தக் கலைஞன் வீட்டிலும் இன்பம் பொங்க வேண்டும் ; மகிழ்வு நிரம்ப வேண்டும், இது எப்படி? பொது மக்கள்தான் இதற்குப் பொறுப் பேற்க வேண்டும்.

பண்டிகை நாட்களில் புத்தாடைகள் தனி இடம் பெறுகின்றன. அத்தகைய புத்தாடைகளை வாங்கும் போது பொதுமக்கள் கைவழி இயங்கும் நெசவுக் கலைஞன் படைத்த ஆடைகளைப் பெருமளவில் வாங்கினால், நிச்சயம் உழவனுக்கு மட்டுமல்ல, நெசவாளிக்கும் நன்றி கூறியவர்களாவார்கள்.

பொங்கல் பண்டிகை விழாவெடுத்து, திருநாள் கொண்டாடும் தமிழ் மக்கள், இந்நன்னாளன்று கைத்தறிப் புத்தாடைகளை உடுத்தி, பல இலட்சக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் இல்லத்திலும் மகிழ்ச்சி பொங்க வைப்பதன்மூலம், தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெற வழி வகை செய்வார்கள் என்பதில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது.

வெறும் இயந்திர கதியில் இத்தொழில் ஈடுபட்டிருக்கவில்லை. மனிதத் துடிப்பின் இயக்கத்தோடு இயக்கமாய் இத்தொழில் இணைந்து அன்று தொட்டு இன்றுவரை வளர்ந்து வருவதாலேயே இடையே பல பயங்கர இடர்களும் இன்னல்களும் ஏற்பட்ட போதும் அவற்றைத் தாங்கி, இன்றும் தலை நிமிர்ந்து நிற்கிறது, வேலை வாய்ப்புத் தலைமையிலும் நாளும் வளரும் தன்மை கொண்டது இத்தொழில். இத்தொழில் கலை வண்ணம் கொண்டது ; கை வண்ணம் மிக்கது. இத்தகைய பண்டைச் சிறப்பும், பெருமையும் வாய்ந்த இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் உருவாக்கும் எழில் வண்ண ஆடைகளைப் பொதுமக்கள் வாங்குவதன் மூலம், பண்டைப் பெருமை வாய்ந்த ஒரு தொழிலை ஆதரிக்கிறார்கள் என்பதோடு, தங்கள் மனம் விரும்பும் ஆடைகளை மலிவான விலையில் புத்தம் புதிய டிசைன்களிலும் பெறுகிறார்கள்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற கைத்தறியாடைகளின் சிறப்பை மேலும் அதிகமாக்குவது பண்டிகை நாட்களில் அரசாங்கத்தால் தரப்படும் விசேஷ தள்ளுபடி சலுகையாகும்.

கைத்தறியாடைகளின் விற்பனையின் பேரில் வழக்கமாகத் தரப்படும் ரூபாய்க்கு 5 பைசா தள்ளுபடியோடு, விசேஷ தள்ளுபடியாக 5 பைசாவும் சேர்த்து மொத்தம் ரூபாய்க்கு 10 பைசா தள்ளுபடி பொங்கல் பண்டிகையின் போது கிடைக்கும். சாதாரணமாக இவ் விசேஷ சலுகை 8 நாட்களுக்குத்தான் தரப்படுவதுண்டு. ஆனால் இவ்வாண்டு 3-1—67 முதல் 16-1—67 வரை 14 நாட்களுக்கு அரசாங்கம் தர இருக்கிறது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, எழிலான, கவர்ச்சியான, விலை மலிவான, உறுதியான கைத்தறியாடைகளைப் பொதுமக்கள் ஏராளமாக வாங்கி தாங்களும் மகிழ்ந்து, நெசவாளர்களையும் மகிழ்விக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்பம் எங்கும் பொங்கட்டும்.

THE ART OF GOVERNMENT

KODUMUDI RAJAGOPALAN.

4. FOREIGN POLICY.

Society is like the sea. There is no permanent calm in it, nor restlessness. In the midst of peace, there is restlessness. In the midst of restlessness, there is peace. Like a living organism, it reacts to diverse forces. Its internal needs depend on the external circumstances. War or peace-it is not decided by the state of its home affairs. When we demand peace in the realm, it is not the peace of the slave or the grave that we shout for. Only that country is politically alert which reacts to the slightest encroachment or invasion of the national frontiers The boundaries of a state are not geographical: impassable mountain barriers do not constitute the boundaries. The boundaries of a realm are pushed or contracted by the extent or limitation of diplomacy. A country's foreign policy must be based on this central fact. Only a politically alert society will have the strength and stamina to resist threats to its territorial integrity.

Relationship with other countries should not be permanently hostile or friendly. Because of ong standing friendship, the neighbour country is not necessarily a friend. A firm foreign policy is possible only if one's eyes are alert and one's arms are strong. In the interests of human welfare, one may identify with other nations but the moment there is a threat to our national integrity, our own. It is from this feeling of uniqueness of individuality that the great force of Nationalism springs.

When there is strength, there is friendship. No state need accept disarmament. As long as worldly desires last, we have need for armed strength, though it is not like saying that war is an instrument of policy.

A strong, neighbourly country may not be a permanent friend. The friendship inspired by force of circumstances may not last well. Seperately Poland and Russia may be friendly to France. But when France is threatened, it may be helped by a Britain which may not be friendly to Poland or Russia, it may be positively hostile to them. Like light and shadow, every country is ringed in by friends and foes. The existence of such neighbours constitute the strength to state.

No neighbour should be considered a friendly nation when (1) its internal affairs are in perpectual turmoil (2) its people are suffering, (3) its political set-up is riven with rivalry and passion (4) its ministers are selfish; (5) its armed forces are mercenary; and (6) its finances are unstable.

But, on these grounds, we must not annex it in the interests of our safety or security.

It is not wrong to be a neutral in times of war. But victims of fear complex cannot be considered neutrals. Gandhiji has said that Ahimsa is not the weapon of the weak but of the strong. So also, neutrality is not the weapon of a weak nation. A country can be a neutral only when it has the strength to resist an aggressor, either one or many. We must praise and follow a policy of neutraltiy when it is based on firmness and valour.

An eye for an eye, a tooth for a tooth, violence must be combated by violence—some may say that this may be opposed to righteousness but it is not so. In the eyes of diplomacy, in the interests of patriotism such shouts may be ignored.

A country must not jump into war in panic or in ignorance. Army patrol, restriction of movements, open propaganda, espionage only after all these are used should there be an open declaration of war. Resort to arms must be the last resort. It is not weakness to achieve one's objective through diplomacy. True valour consists in the adoption of both fronts—diplomacy and war.

Geography does not dictate diplomatic relations with other countries. Beyond all these, a country's solestrength is the strength of her people. The strength born of the enthusiastic support of a people is the real life of a government.

5. AIMS OF GOVERNMENT

A country's real strength lies in its alround development. Hence it is the real goal of Government. The government must see that every individual discharges his responsibility and thus strengthen society. This may appear to echo Hegel's view that the government must interfere with the day to day affairs of the citizen. It is so for there is no greater danger to a government than to let the citizen do as he likes.

The government must recognise all socio—religious organisation within its territory. But these must not be allowed to affect the secular nature of the state. Nor must they destroy the general benefits arising from government policies. Government should also see that there is no clash of interests among them. Their mutual rivalry and animosity may release turbulent forces inimical to the very existence of the state.

Government must also watch that these associations do not tyrannise over the individual. All individuals must be enabled to form such associations within the limits of the law.

The religious feelings of the people must be respected. But religion must not be allowed to dominate government Religion is an individual affair and the state must not follow any particular religion in the general task of administration.

6. ECONOMIC EQUALITY

Most of us forget the real importance of equality. It has degenerated into a meaningless and false cry. If we understand the real meaning of equality, the current confusions on the creation of social wealth and its distribution will vanish.

If political freedom is to be real, it must be based on economic equality. Man's needs have to be satisfied by himself by the creation of wealth. When it is organised on a social basis, the problem of distribution of the social wealth arises. Men may create more or less than what they need. In the former case, the excess wealth in the form of goods are exchanged. In the latter case what is not to be got in one's country is imported: for this he either pays in cash or in goods. It is from their experience of the varied manisfestations of this problem that Marx and Gandhiji have clearly envisaged the need for economic equality as the basis of a secure social order.

The existence of producers and the non-producing idle rich has given rise to economic inequality in the form of Haves and Have-nots. It is the latter that wields political power, and tries to perpetuate economic inequality as permanent tyranny. And, this tyranny hampers production and rouses class conflict.

The extermination of the idle rich and the distribution of work among all will not usher in economic equality. We may ignore the shouts for economic equality raised by disciplined and militant minority which wants to capture political power by nursing the discontent of the people to a dangerous extent. This minority has one thing in common with the capitalist-democracy-to exploit the underdogs by their political power.

The man who robs us of what we have by polished manners is in no way different from the crude highway robber. Such is the difference between monopolistic democrats and the brigands who mouth economic equality. Both have in common the ideal of exploiting the many for the benefit of the few.

If so, what is the nature of economic equality which I advocate. Everyone must realise the value and dignity of labour. Economic equality will be strengthened only when all work for the good of all. The inequality implicit in nature can, however, be never eliminated We must, of course, end the forms of inequality arising out of historical circumstances. To say this is not to give importance and significance to man's individuality. Inequalities which stand in the way of social solidarity and strength and the commonweal should be done away with. Man must labour—whether by brawn or brain. Neither intellect nor physical labour as a source of wealth should be allowed to entrench itself. Both are needed for the state, which should be vigilant to utilise both.

When we decide that every one must work that there should be no difference in treating the form of labour and that the state's primary duty is to ensure this, we avoid classwar and establish real economic equality. In such circumstances those who incite class conflict are only sowing dissatisfaction. Where discord and dissatisfaction exist, what chance is there for equality.

In rights to land and labour, there must be no exploitation. The tyranny of monopoly is the

See on page 14

The Nightingale of India:

POETESS SAROJINI NAIDU

★

"SOMALAY"

Mrs. Sarojini Naidu was one of the greatest patriots of our time. She was among the tallest of leaders. Her friendship with Mahatma Gandhi led her to the battle-field of non-cooperation and non-violence and to various terms of imprisonment. When Mahatma Gandhi's term as Congress President was over and a successor had to be chosen, she was the inevitable choice.

Mrs. Sarojini Naidu's greatness can also be inferred from the fact that she was the first woman to be appointed Governor of a Province. The Asian Relations Conference elected her as its President, in 1947.

As a peace-maker, she was at her best in settling the differences between members of the Congress High Command and in various efforts to bring about Hindu-Muslim unity.

Mrs. Naidu's contribution to the emancipation of Indian women is immense. She organised the Indian Women's Association, arranged deputations of women to the Southborough Commission for Franchise Reform and pleaded for the rights of women before several Committees in England.

Sarojini Naidu visited England, various countries of Europe, Africa and the United States on several occasions and served as unofficial Ambassador of India in the pre-independence era.

In view of the full and varied life she led, Mrs. Sarojini Naidu's literary and cultural achievements are sometimes forgotten. Her published works include:

(i) The Bird of Time—William Heinemann, London, 1912.

(ii) The Broken Wing—William Heinemann, London, 1917.

(iii) The Feather of the Dawn—Asia Publishing House, 1961.

(iv) The Golden Threshold—William Heinemann, London, 1905.

(v) The Gift of India—Reprinted from the report of the Hyderabad Ladies' War Relief Association, 1914-15.

(vi) Gopal Krishna Gokhale—a booklet, first published in the Bombay Chronicle.

(vii) The Sceptre and the Flute—Kita bistan Allahabad, 1948.

(viii) The Soul of India—The Cambridge Press, Madras, 1919.

(ix) Speeches and Writings of Sarojini Naidu—G. A. Natesan & Co., Madras.

It is, however, a pity that most of Sarojini's speeches remain unrecorded. For, she always spoke extempore. She could never read a written text—not even in delivering the Governor's Address to the U. P. Legislature!

Sarojini could always crack endless jokes. She liked chocolates and chicken patties. She loved good food, good cheer. good friends, ornaments and silks. Above all she had a passionate affection for English language, literature and poetry.

Sarojini Naidu was a great artist. She had intense love for colour. She was not only colourful herself; but her writings also were full of colour. Sapphire and gold, scarlet and blue, topar and saffron, red and purple, these hues and all the colours of the rainbow lit up her poetry, her speeches, her letters and her conversation.

Amid intense political crises, Sarojini Naidu was the source of colour and laughter. She would even cut jokes at Gandhiji's expense.

Sarojini Naidu was born of Bengali parents. Her father, Dr Aghorenath Chattopadyaya was one of the greatest men of his time; besides being a brilliant scientist, he was also a poet in Urdu and in Bengali. They settled in Hyderabad and the family grew in a cosmopolitan atmosphere. Sarojini's brother Harindranath Chattopadyaya also became a poet of distinction.

Sarojini was born in 1879. As a child, she mastered the English language and spoke to her parents only in English. At the age of eleven, she wrote a long poem LADY OF THE LAKE—1300 lines in 6 days. At the age of thirteen, she wrote a drama of 2,000 lines. Later, she passed her Matriculation Examination at Madras. Though her father sent her to London and Cambridge, she did not like organised study.

On her fourteenth birthday in 1893, Sarojini wrote a charming verse called ON MY BIRTHDAY. Also, she wrote a poem on Edwin Arnold. The poems written by her in 1894—1900 were of an intensely romantic nature.

While in Italy, she was overcome with the beauty of Florence and broke into poetry. She has sung too of Hyderabad, her birth-place and of the River Musi which separates it from Secunderabad.

After 1926, Sarojini gave her time solely to politics and she rarely wrote any thing. She travelled extensively all over the country and burst into poetry which was delivered in the form of public speeches through her golden voice.

Sarojini was a great correspondent. She wrote letters—numerous letters—to friends, admirers and others and kept in close touch with all the poets of her time. She was a frequent visitor to Tagore's Santineketan where she became a familiar and respected figure.

On March 2. 1949 Sarojini died, a few days after her visit to Santineketan as Chancellor of Visva Barathi in her capacity as Governor of U. P. With her passing away, the story of a radiant personality, a great literary giant and a vigorous freedom fighter came to an end.

Let me close this article with one of her letters and one of her poems.

ON THE BIRTH OF INDRA–Dec. 17, 1917

Dear Jawahar,

I have not one single moment since hearing your good news to sit down and send a word of congratulation to you and Kamala or a blessing for my new niece. I do both now on a half-second snatched from a day filled — as usual — with engagements

Love to all and a kiss to the new Soul of India.

Yours affectionately,
SAROJINI NAIDU.

THE PULSE OF THE MORNING

Springtime, O springtime, what is your secret,
The bliss at the core of your magical mirth,
That quickens the pulse of the morning
to wonder
And hastens the seeds of all beauty to birth,
That captures the heavens and conquers
to blossom
The root of delight in the heart of the earth?

—THE JOY OF SPRINGTIME.

From: THE BIRD OF TIME.

Continuation of page 12

cause of all class conflicts from the ancient to present times. Fatalistic attitudes help the capitalist monopolists. They must end. But we should not rush to the other extreme and create new forms of inequality in place of the old.

Economic equality and economic democracy are not different. They can co-exist only when the state insists that everyone shall labour. Such insistence may be considered as dictatorial interference by the political power of the state. Even so, such dictatorship is necessary for a limited period in the interests of democracy. Readers should not confuse between the democratic dictatorship that I envisage and the pseudo democracy of the tyrannical dictatorship. In what I advocate, I insist on patriotic endeavour by all in all walks of life. Where then the scope for competition, jealousy and quarrels?

Equality can exist only where there is no jealousy and fear in a state. Only such a state can be strong. While the state's political power may be centralised, its economic power must be based on the village. It must be broad based so that the benefits of scientific production to meet our modern wants may be available to all. Industrialisation can be only a source of strength to the state. A mixed economy in which individual and state enterprise play a complementary role will ensure social stability.

Knowledge is the true basis of equality. The state must discharge well its task for the spread of knowledge. An intellectually alert people cannot be stampeded to shout any slogans. Those who claim rights without discharging their duties can be brought under control by the state by spreading knowledge in a scientific manner. A new era will spring up when the citizen discharges his duties and then claims his rights.

சென்ற இதழ் தொடர்ச்சி

கற்பித்தலும் ஒரு கலை!

★

“ஸத்யா”

ஆசிரியரை மாணவர் அடிக்கத் துணியும் அளவுக்கு, கோவில்கள்போல் தன் அறிவுக் கண்களைத் திறந்துவிடும் கல்விக் கூடங்களைத் தன் கையாலேயே இடித்து நொறுக்கும் அளவுக்கு மாணவர் மனம் மாறுமா? இந்த மூன்று சூழ்நிலைகளையும் மீண்டும் பள்ளியில் ஏற்படுத்த முடியுமா? என்பது கேள்வி.

முதல் நிலை நாட்டின் பொருளாதாரத்தைச் சார்ந்துள்ளது எனவே அதை நீண்ட காலப் பிரச்சனையாக ஒதுக்கிவிடுவோம். இரண்டும், மூன்றும் நம் கையில் உள்ள பிரச்சனைகள். நாம் முனைந்தால் தீர்த்துவிடலாம். போட்டி மனப்பான்மையை வகுப்புக்களில் ஏற்படுத்துவது அவசியம். அதற்காகச் சிறு சிறு தேர்வுகள் உடனுக்குடன் அவ்வப்பொழுது வைப்பதும் அவசியம். ஆசிரியர் திருத்தும் பளுவை வேறு வழிகளில் குறைக்கலாம், தேர்வுகளை வாய் மொழியாகவே - கூடியவரை வைத்தல், வகுப்பில் திறமை அதிகம் உள்ள மாணவர்களைக்கொண்டு திருத்தச் செய்தல் (இதற்கு வினா - நேரிடையான, அளவான விடைகள் கொண்டதாக இருத்தல் வேண்டும்) போன்றவைகளால் தனது திருத்தும் சுமையைக் குறைத்துக் கொள்ளலாம்: மாதம் ஒரு முறையேனும் தன் சொந்தப் பொறுப்பில் திருத்தும் நல்ல தேர்வுகள் வைக்கலாம். இவ்வாறு மாணவன் கற்க வேண்டிய கருத்துக்களைச் சிறு சிறு பகுதிகளாகக் கற்கச் செய்வது ஆசிரியர் கடமைதான், நமது திறமையெல்லாம் கொட்டி விஷயங்களை விளக்கியவுடன் நமது கடமை முடியவில்லை. நாம் சொன்னதை அவன் ஏற்றுக் கொண்டது எவ்வளவு என்பதை நாம் அவ்வப்போது ஆராய்ந்து அதைச் சரிசெய்து மேலே தொடர்ந்து போகும் நிலைமையில்தான் நமது உண்மையான கடமை துவங்குகிறது. முந்திய செயலில் ஆசிரியர் தன் திறமையைக் காட்டுவது எளிது. அது வெளிப்படை. பிந்திய நிலை அடிப்படை. அது வேர் போன்றது.

குழந்தைக்குத் தேவையானதைச் சமைத்து வைத்தால் மட்டும் போதாது. அதைப் பக்குவப் படுத்தி, நேரம் பார்த்து உடம்பின் நிலைக்குத் தகுந்தபடி குழந்தையைச் சாப்பிடச் செய்ய வேண்டியிருக்கிறது. அன்னை அமுதூட்டுகிறாள். ஆசிரியர் அறிவை புகட்டுகிறார். அன்னை எவ்வளவு வாஞ்சையுடனும், எவ்வளவு கவனத்துடனும் இந்தப் பொறுப்பைச் செய்கிறாள்? இதைவிடப் பல மடங்கு ஆசிரியர் செய்ய வேண்டியிருக்கிறது.

நாம் கல்வி சம்பந்தமான எல்லா விதிகளையும் மேல் நாட்டிலிருந்து கற்றுக்கொண்டோம். தவறில்லை. ஆனால் அதில் செய்ய வேண்டிய மாறுதல்களைப்பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டுகிறேன். நம் மாணவர்கள் பெரும்பாலும் வறுமையின் பிரச்சனைகள் நிறைந்த குடும்பத்திலிருந்தே வருகிறார்கள். பள்ளியில் நாம் நோட்டு ஏன் வாங்கி வரவில்லை. புத்தகம் ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்கிறோம். வீட்டில் பெற்றோர் வாங்கித் தரவில்லை, நடுவில் மாணவன் வகுப்பைவிட்டுப் போகும் தண்டனை பெறுகிறான். இது போன்ற உண்மைகளை அறிய கண்ணோட்டம் அவசியம். இதேபோல் வசதியிருந்தும் சோம்பேறித்தனத்தால் புத்தகம் நோட்டுகளைக் கொண்டுவராதவர்களும் உண்டு. இதை எடை போடும் திறமை நமக்கு அவசியம் இருத்தல் வேண்டும்.

ஒரு மாணவன் தொடர்ந்து ஒரே கிழிந்த சட்டையைப் போட்டுக்கெண்டு வந்தான். ஏன் இதைத் தைத்துப் போட்டுக்கொண்டு வரக்கூடாதா? இதைக் கொண்டுவா, கிழிசலை நான் தைத்துத் தருகிறேன் என்றேன். அவன் அழுதேவிட்டான். சட்டை மிக நைந்திருந்தது. தைக்க வரவில்லை பிறகு அவனைத் தனியே விசாரித்ததில், தனக்குத் தந்தை இல்லையென்றும், தாய் கூலி வேலை செய்து பிழைக்கிறாள் என்றும் தெரியவந்தது. இம்மாதிரி நிலைகள் எவ்வளவோ?

இது ஒருபுறமிருக்க, மாணவன் ஏதோ பெரிய சுமையைத் தன் தலையில் கட்டிவிட்டதுபோல் வீடு திரும்புகிறான். ஏராளமான வீட்டு வேலைகள் கொடுப்பதால் மட்டும் பயனில்லை. பளுவைக் குறைப்பது விவேகம் என்பது மனித இயல்பின் அடிப்படை. போர்டு மோட்டார் சரித்திரத்தைப் பார்த்தால் கனத்தைக் குறைத்த பிறகு வேகம் அதிகமாயிற்று. அதன்படி மாணவன் மனப்பாடம் செய்ய வேண்டியவற்றை அல்லது வினாவிடைகளை அவ்வப்பொழுதே வகுப்பில் செய்து முடிக்கச் செய்ய வேண்டும். மீள் பார்வை என்பது ஆண்டு இறுதியிலோ, அல்லது மாத முடிவிலோ தேவையானது. அல்லது அது ஒவ்வொரு பாடத்திற்கும் தேவையானது. வகுப்பிலேயே கேள்விகளைப் படித்து வகுப்பிலேயே ஒப்புவிக்கும் நிலையில் பல நன்மைகள் ஏற்படுகின்றன,

(நான் கற்பிப்பது ஹிந்தி மொழி) அதன் நிலை பற்றி விவரிக்க வேண்டாம், அது கட்டாயமல்ல. ஆனால் வகுப்பில் பாடம் நடத்தவேண்டும். மார்க்கு

வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற பாடங்களையே படிக்காதவர்கள் கட்டாயமில்லாத இத்தப் பாடத்தைப் படிக்காதது வியப்பில்லை. ஓரளவாவது மற்றவர்களும் விடை அளிக்கவேண்டும். அவ்வாறு விடையளிக்கச் செய்யவேண்டும் என்ற ஆர்வம், பள்ளித் தணிக்கை நடைபெறவிருக்கிறது. எல்லோரும் கேள்வி பதில் தெரியாமல் நின்றால் எப்படி இருக்கும் என்ற வேதனை. இந்த நிலையில் சுலபமான வாக்கியங்களைக் கொஞ்சம் புத்திசாலியான மாணவனைக்கொண்டு பார்த்துப் படிக்கச்சொல்வது. பிறகு அவனையே பாராமல் சொல்லச் செய்வது ; பிறகு இதுபோல் வேறு யாரால் சொல்ல முடியும் என்று கேட்டு அதில் உற்சாகம் கொள்பவரைப் பாராமல் சொல்ல வைப்பது. பிறகு மீதமுள்ளவர்களைச் சொல்லவைப்பது என்ற முறையில் ஓரளவு முன்னேற்றம் தெரிந்தது. முக்கியமாக மாணவர்கள் கவனம் திரும்பியது. ஆனால் இதே முறை நீடித்தால் அவர்கள் கவனம் மாறுகிறது. அவர்கள் இயல்பே புதுமையை விரும்புவதாக உள்ளது. ஒரே பொம்மையைக் கண்டு சலித்த குழந்தை துருப்பிடித்த தகர டப்பாவில் கூட புதிய மகிழ்ச்சி காண்பதுபோலப் பல முறைகளைக் கையாள்வது மிக அவசியமாகிறது.

ஆசிரியர் பயிற்சியில் தாய்முறைக்கு மிகுந்த மதிப்பளித்து வற்புறுத்தப்படுகிறது. இதில்கூட நம் நாடும் மேல் நாடும் மிகுந்த வேறுபட்ட நிலையிலுள்ளன. தாய் இயற்கையாகச் சூழ்நிலைகள் அமையும்போது கற்பிக்கிறாள். ஆசிரியர் செயற்கை நிலையில் கற்பிக்கிறார். ஓரளவு இந்த முறை உதவும் என்றாலும், இதையே நம்புவது மாணவர்களை குழப்பத்தில்தான் முழுக்கும். மொழியைப் பொறுத்தவரைக்கும் தாய்மொழியையும், புதிய முறையையும் ஒப்பிட்டு, இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்தபடியே படிப்பது மாணவனுக்கு உதவியாக இருக்கும்.

ஆங்கிலத்தைப் பொறுத்தவரை இந்தக் கருத்து மிகவும் ஒத்துவராது. இந்தியைப் பொறுத்தவரை இது பயன் தரும். ஆங்கிலம்தான் இன்று நமக்குப் பெரிய பிரச்னையாக உள்ளது. ஆனால் இதிலும் புதிய முறைகள் உறுவெடுத்து ஓரளவு நிலைமையைக் கடினமாக்கி விட்டது. நான்காம் வகுப்பிலிருந்து எழுத்துமுதல் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. அத்துடன் இலக்கணப் புத்தகம், இலக்கண வகுப்பு, இலக்கணப் பயிற்சி என்ற தனிப்பிரிவு இருந்தது. இப்பொழுது பாடத்துடன் கலந்துவிட்டது. இது ஒரு குறையாகவே தோன்றுகிறது. நடுவில் பத்து. பன்னிரெண்டு ஆண்டுகள் அந்த மொழியின் தொடர்பு இல்லாதபோதுகூட, பிறகு அதைப் பயன்படுத்த முயன்றபோது நெஞ்சின் பசுமரத்தாணிபோல் அது பதிந்திருந்தது. ஆங்கிலத்தில் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுவது கடினமாக உள்ளது. இப்போது இலக்கணப் பயிற்சியை முன்போல் தனிப்பிரிவாக வைப்பது நல்லது என்பது அனுபவம். நான்காம் வகுப்பிலேயே ஆங்கில இலக்கணக் கேள்விகளுக்கு நாங்கள் ஆங்கிலத்திலேயே விடையளிப்போம். மனப்பாடம் செய்வது அப்பொழுது மிகச் சுலபமாக இருந்தது. நிறைய வினைச்சொற்களும் (Verbs) அவற்றுடன் வரும் இடைச்சொற்களையும் (Pre-position) நாங்கள் வகுப்பில் ஒப்பிப்போம். அவற்றில் பலவற்றிற்குப் பொருள் தெரியாது. ஆனால் நான்கு ஐந்து வகுப்புக்களில் ஒப்பித்தது, பின்னால் உதவியாக இருந்தது. ஆங்கில வாங்கியங்களைப் பிரித்து விவரிக் இலக்கணம் தனியாகக் கற்றுத்தரப்பட்டது. (Analysing). இதனால் Simple, Compound, Complex வாக்கிய அமைப்புக்கள் எங்களுக்கு எளிதாக இருந்தது. ஆக மனப்பாடம், இலக்கணம் இரண்டிற்கும் முன்போல மதிப்பளித்து சிறிய வகுப்பிலிருந்தே ஆரம்பித்தால் அது அவர்கள் மனத்தில் பதிந்து, பிற்காலத்தில் சொந்தமாக எழுதும் திறமையை உண்டாக்கும்.

மூளை சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து சொல்வனவாவது: குழந்தைகள் எவ்வளவு புது விஷயங்களை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாமாம். ஏனென்றால் சின்ன வயதில் அவன் கற்கும் ஒவ்வொரு விஷயத்திற்தும் மூளையில் ஒரு பாகம் ஒரு அறை ஒதுக்கப்படுகிறது. அது அழிவதில்லை. நடுவில் ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு அவன் ஆரம்பத்தில் கற்றதை விட்டுவிட்டாலும், பல வருடங்கள் கழித்து அதைக் கற்க ஆரம்பித்தாலும் அது ஞாபகத்திலிருந்து உதவியாக எளிதில் கற்க வருகிறது. சிறு வயதில் பிரஞ்சு மொழி கற்ற ஒருவன் பல ஆண்டுகள் கழித்து கற்றபொழுது எளிதில் வந்துவிட்டது. ஆனால் அவனோடு புதிதாக பிரெஞ்சு கற்க ஆரம்பித்தவன் எளிதாகக் கற்க முடியவில்லை. காரணம் சிறிய வயதில் இதைக் கற்க அவன் முயற்சிக்கவில்லை. வளர்ந்த பிறகு புதிய விஷயங்களுக்குத் தனியிடம் ஏற்படுத்த முடியாதபடி மூளையின் தசைநார்கள் தடித்துவிட்டன. அதனால்தான் “இளமையிற் கல்” என்று பெரியோர்கள் சொன்னார்கள். மூன்று அல்லது நான்காம் வகுப்பிலேயே பிற்காலக் கல்விக்கு வித்திட்டு கடினமான இலக்கண மனப்பாடப் பகுதிகளை நடுநிலை வகுப்பு அதாவது எட்டாம் வகுப்பு வருவதற்குள் ஒருமுறை முடித்துவிட முயன்றால் இவற்றையே மீள்பார்வையாக உயர்நிலை வகுப்புகளில் எளிதில் படித்துவிடுவார்கள்.

“கும்பலோடு கோவித்தா” என்பது போல் பாடத்துடன் இலக்கணம் என்பது போதாது, முன்போலவே இலக்கணப் பயிற்சியில் தனிக் கவனம் செலுத்துவது அவசியமாகிறது. தாய் முறையிலும், இலக்கண முறையிலும் கற்கும் மொழிப் பயிற்சியானது தண்டவாளத்தில் இரு கோடுகள் ஒன்றை ஒன்று தொடாமலும், குறிப்பிட்ட நிலையை விட்டு நீங்காமலும் இருப்பது போல இணையானவை. இந்த இரு வகைகள் மூலம் நடுநிலையான மொழிப் பயிற்சி கிடைக்கிறது. இதில் எதை இழந்தாலும் கல்வியின் தரம் குறைகிறது.

மாணவனது நிலைபற்றிய கண்ணோட்டத்திற்குப் பிறகு ஆசிரியர் நிலைபற்றிய வினா எழுகிறது. ஆசிரியர் அலுப்புச் சலிப்பு இல்லாத ஆர்வம் மிகுந்தவராதல் அவசியம். ஆசிரியர் சுகவாசியாக இருந்தால் மாணவன் அவரைவிட மிகுந்த சுகவாசியாக இருக்கத் தொடங்குவான். ஆசிரியர் நாற்காலியில் சாய்ந்துகொண்டு பாடம் கற்பித்தால் அவன் மேஜைமேல் படுத்துக்கொண்டே பாடம் கேட்கத் துவங்குவான். ஆசிரியர் விழிப்புணர்வுடன் செயலாற்றாவிட்டால் இந்தக் காலத்து மாணவர்கள் திணறடித்துவிடுவார்கள். இதனால் ஆசிரியர் பொறுப்பு பல மடங்கு அதிகரிக்கிறது. அவர் நேர்மையுள்ளவராகவே இருக்க

வேண்டியதாக உள்ளது. ஏனென்றால் அவர் சொல்வதை—பேசுவதைப் பல பிஞ்சு உள்ளங்கள் பார்க்கின்றன. அதை அப்படியே காப்பியடிக்க முயல்கின்றன. நம் தவறு நம்முடன் போய்விடுமானால் சுதந்திரமாக வாழலாம். ஆனால் அதன் பிரதிபலிப்பு பல பிஞ்சு உள்ளங்களில் தோன்றப்போவதால் நமது கடமை சிக்கலாக உள்ளது. ஒரு போர் வீரனைப் போன்ற நிலை நமக்கும் உள்ளது, போர் வீரனது போராட்டம் உடலோடு முடிகிறது. நம்முடையது உள்ளத்தோடு ஒரு சிறுவனை நல்ல குடிமகனாக வளரும் இயல்புக்குத் திருப்பிவிட வேண்டியது நமக்குள்ளது. பழமொழிகளைச் சொல்வதாலும், மேற்கோள்களைக் காட்டுவதாலும் இந்தக் காலத்து மாணவர்கள் திருந்திவிட மாட்டார்கள். நம் செயல் அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைதல் வேண்டும். சலியா உழைப்பு பல நூல்களைக் கற்று தன் திறமையை வளர்த்தல், தம் நடை, உடை பாவனைகளில் மாணவனது கருத்தைக் கவராது, தன் அறிவாற்றலாலும் செயல் திறமையாலும் கவர்தல் — ஆகியவை குருபக்தி குறைந்துவிட்டதே என்ற பிரச்சனையைத் தீர்க்கும்.

குருகுல வாசத்தில் இருந்த நிலை வேறு என்றாலும், கற்பிப்பவர் ஆசிரியர் என்றும் கற்பவர் மாணவர் என்னும் நிலை மாறுதல்லவா? மாணவன் பணிவுடன் இருந்தால்தானே ஆசிரியரை உற்சாகப்படுத்தி அவரிடம் நிறையக் கற்றுத் தெளியலாம். அடடா......— (மாணவர்கள் மனத்தை ஈர்ப்பது எப்படி என்ற ஆராய்ச்சியைத் தொடங்கியுள்ள இந்த நேரத்தில் இப்படி எழுதுவது பொருந்தாதுதான், என்றாலும் மாணவன் இதை உணரும்படி செய்வது நம் கடமையாகும்.)

ஓர் ஆசிரியர் திறமையுள்ளவர், மாணவன் சந்தேகம் கேட்டால் இதுகூடத் தெரியாதா என்று அடிக்கடி சொல்வார். மாணவன் சந்தேகம் கேட்பதையே நிறுத்திவிடுவான். இந்தப் பிளவு வளர்ந்து மாணவன் ஆசிரியரைவிட்டு வெகுதூரம் சென்றுவிடுவான். “கல்வி சம்பந்தமான எந்தச் சந்தேகமும் நாம் ஆசிரியரிடம் கேட்கலாம். அதை அவர் தீர்த்து வைப்பார் என்று அவன் எண்ணும்படிச் செய்ய வேண்டும். இந்த இடத்தில் ஆசிரியரது சர்வாதிகார முறை மாறி மாணவன் தேவையானதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் ஜனநாயக முறை வேண்டும். இதற்காக ஆசிரியர் பள்ளியில் இல்லாதபோது வீட்டிலும், வெளியிலும், அவர் எங்காவது செல்லும்போதும் நச்சரிக்க முடியுமா? முதலில் கூறியபடி இதுவும் வகுப்பறையிலேயே நடக்கவேண்டும். “அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்” என்றபடி மாணவன் கொஞ்ச நேரம் படித்தாலும் கவனத்தைக் குவித்து நன்கு கற்றால் போதுமானது.

பள்ளியில் நீதிபோதனை வகுப்புகள், குடிமைப் பயிற்சிபோன்றவை கண் துடைக்கும் வகுப்புகளாகிவிட்டன. எனக்கு ஒரு நீதிபோதனை வகுப்பு தரப்பட்டது, இதை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்புரியத் துவங்கினேன். ம்காபாரத, ராமாயணக் கதைகளைக் கூறினேன். ஓரளவு ஆர்வத்துடன் கவனித்தாலும் பெரும்பாலும் அக்கறையில்லாதிருந்தார்கள். காரணம் அது பரீட்சைக்குரியதல்ல. வருங்கால மக்கள் அறக்காவலர்களாக/மறத்தோளராக விளங்கவேண்டுமானால் இந்த இரண்டு பாடங்களையும் பரீட்சைக்குரிய பாடங்களாக ஆக்குவது அவசியம். மருந்தைக் குடிக்கும் குழந்தை அது தனக்கு அவசியம் என்று தெரிந்துகொள்ளப் போவதில்லை. தாய்தான் அதன் அவசியத்தை அறிந்து கட்டாயமாகப் புகட்டுகிறாள் அதுபோல இந்த பாடங்களையும் பரீட்சைப் பாடங்களாகவோ அல்லது மற்ற பாடங்களின் ஒரு பகுதியாகவோ ஆக்கினால் புரிந்தோ, புரியாமலோ, விரும்பியோ, விரும்பாமலோ அவற்றைப் படிப்பார்கள். சிந்திக்கும் திறன் வந்தால் உணர்வார்கள்.

ஹிந்தி எதிர்ப்புக் கலவரம் நடந்தபிறகு கல்வி சம்பந்தப்பட்ட பெரிய படிப்பினைகள் தோன்றியுள்ளன. வெகு வேகமாக வளர்ந்துவரும் புறக்கவர்ச்சிகளிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றி (நோயிலிருந்து காப்பது சுலபம். இது மனநோய். தீர்ப்பது கடினம்) நல்ல குடிமகனாக வளரச்செய்வது பெற்றோர், ஆசிரியர் இருவருடையதும் ஆகும்.

பள்ளிக்கும், மாணவர் பெற்றோருக்கும் ஒரு சம்பந்தமிருப்பதில்லை. முன்பு பெற்றோர் சங்கம் வைத்திருந்தார்கள். இப்பொழுது மீண்டும் அவற்றை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பெற்றோருக்கும், பள்ளிக்கும் தொடர்பு ஏற்படுத்த வழிகளை வகுப்பது தலையாய க்டமை. மாதமொருமுறையோ அல்லது வருடத்தில் இரண்டு மூன்று முறையோ பெற்றோர் தினவிழா கொண்டாடவேண்டும். பெற்றோர் சங்க அங்கத்தினருடன் முக்கியமான பிரச்னைகளை விவாதிக்கலாம். எதிர்பாராத நெருக்கடி ஏற்பட்டதாயின் பெற்றோர் ஆசிரியர்களுடன் ஒத்துழைத்து நிலைமையை சமாளிக்கும் சூழ்நிலை உருவாகவேண்டும்.

மாறிவரும் சமுதாயத்தை அமைக்கும் சிற்பிகளாய் ஆசிரியர்கள் விளங்குகிறார்கள். அவர்களது கலையின் உருவமாக மாணவன் இருக்கிறான். எனவே மாணவனைக் குறை கூறிப் பயனில்லை. முதல் நிலையாக, ஆசிரியர்கள் தங்கள் நிலைமை, கற்பிக்கும் கலையின் தரத்தை உயர்த்தினால் பிரச்னையில் பாதிகுறைய வழியுண்டு.

உண்மையில் ஆசிரியப்பணி புனிதமானது. மறைந்து கிடக்கும் எடிசன்களையும், தாகூர், ஷேக்ஸ்பியர்களையும் நாம் வெளிக்கொணர முடியும். மாணவனது குறையைக் கண்டிக்கும் நாம் அவனது திறமையைப் பாராட்டத் தவறக்கூடாது. தராசுபோல் நமது விமர்சனம் அமைதல் வேண்டும் பாராட்டினால் கர்வமடைந்து படிப்பில் கவனம் செலுத்தமாட்டார்கள் என்று சிலர் கருதுகிறார்கள். அந்தக் கருத்தின்படி வசைபாடுவது தவிர பாராட்டுவதறியாத நிலைக்கு வருகிறார்கள். இது மாணவனது உற்சாகத்தை மிகவும் பாதிக்கும். அனுபவப்படி கண்டதில் பாராட்டப்பட்டவன் இருமடங்கு உற்சாகத்துடன்தான் வேலை செய்கிறான்.

சொந்த விருப்பு, வெறுப்புகளை வதப்பில் காட்டாத ஞானியாக நாம் இருக்கவேண்டும். 20 ஆண்டு கட்குப்பின் பலன் தரப்போகும் புனிதப் பணியில் நாம் ஈடுபடுகிறோம். செயலின் பயன் தொலைவில்

உள்ளது. அது செய்தவனை அடையாது. எனவே தியாக உணர்வுடன் செயலாற்றுதல் அவசியமாகிறது. இவ்வளவு பாடு பட்டு யாருக்கு நன்றி இருக்கப் போகிறதுஎன்று நாம் அலுப்படைய வேண்டியதில்லை. அறிவுச்சுடர்களை ஏற்றிவைத்த பெருமை ஆசிரியர்களுக்கு எப்பொழுதுமே உண்டு.

எனவே பழையன, புதியன எல்லாவற்றிலும் தேவையானதை எடுத்து முற்றிலும் புதிய கல்விப் பாதையை வகுத்தல் அவசியம். சூழ்நிலைகளின் மூன்று மாறுதல்கள் : அதிக எண்ணிக்கை போட்டி மனப்பான்மை குறைவு , வெளி ஆடம்பரத்தில் அதிக ஈர்ப்பு, குருபக்தி குறைவு முதலியன.

கற்பித்தலில் இலக்கணம், மனப்பாடம், முதலியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் தருதல், படிக்கும் விஷயங்களைப் பாரமாகக் கட்டி வீட்டிற்கு அனுப்பாமல் வகுப்பிலேயே பாராமல் சொல்லும்படி செய்தல் ஆசிரியர் மாணவனது தேவைகளை உணரும் கண்ணோட்ட முடையவராயிருத்தல், குடிமைப் பயிற்சி, நீதிபோதனை முதலியவற்றைக் கட்டாயப் பாடமாக்குதல் ஒவ்வொரு புதிய விஷயத்தைக் கற்பித்ததும் மீள்பார்வையில் அதிகக் கவனம் செலுத்துதல், பெற்றோருக்கும், பள்ளிக்கும் அதிகத் தொடர்பை ஏற்படுத்துதல் போன்றவை எடுத்துக்கொண்ட பொருளின் கருத்துத் தொகுப்பாகும்.

இத்துடன் நூல் நிலையங்களை மாணவர்கள் அதிகம் பயன்படுத்த ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். ஆசிரியர் நூல் நிலையத்தை அதிகம் பயன்படுத்தி மாணவர் படிக்கவேண்டிய நூல்களைந் தேர்ந்தெடுத்துப் படிக்கும்படி செய்தல்வேண்டும். இதன்மூலம் இரண்டு நன்மைகள் கிடைக்கும். ஒன்று புறஉலகில் அவன் ஈர்க்கப்படுவதை ஓரளவு தவிர்க்கலாம். இரண்டு நூல் நிலையத்தைப் பயன்படுத்தி தானாகத் தன்னை உயர்த்திக்கொள்ளும் நல்ல பழக்கம் மாணவனுக்கு ஏற்படும்,

பொதுவாக தாயைப்போல் அன்பும், வீரனைப் போல் செயல் திறனும் கொண்டு ஆசிரியர்கள் பிரச்னைகளைப் பாராட்டாது புதிய சமுதாயத்தைத் திருத்தி அமைக்கும் மகத்தான பொறுப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதைத் தட்டிக்கழிக்காமல் செயல் புரிவோமாக !

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
  நல்ல பாரத நாட்டிடை வந்தீர்

ஊனம் இன்று பெரிது இழைக்கின்றீர்
  ஓங்கு கல்வி உழைப்பினை மறந்தீர்

மான மற்று விலங்குக ளொப்ப
  மண்ணில் வாழ்வது வாழ்வென லாமோ

போனதற்கு வருந்துதல் வேண்டாம்
  புன்மை தீர்த்திட முயலுவோம் வாரீர்

என்று நமக்கு வழிகாட்டி அண்ணல் பாரதி அழைக்கிறார். வாரும் ஆசிரியப்பெருமக்களே ! மாணவமணிகளே வாரும்.

*

இந்திய எழுத்தாளருக்கு லீட்ஸ் பல்கலைக் கழகப் பாராட்டு.

புகழ்பெற்ற இந்திய நாவலாசிரியர் திரு. ஆர். கே. நாராயணனுக்கு டாக்டர் ஆவ் லெட்டர்ஸ் என்ற கௌரவப்பட்டம் அளித்து கௌரவிக்க, லீட்ஸ் பல்கலைக்கழகம் தீர்மானித்திருக்கிறது. திரு. ஆர். கே. நாராயணன் நாளது 26--5--1967 அன்று நடைபெறும் நிகழ்ச்சியில் லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் சான்சலரான கென்ட் சீமாட்டியிடமிருந்து கௌரவப் பட்டத்தை ஏற்றுக் கொள்வார்.

“திரு ஆர். கே. நாராயணன் இந்தியாவின் தலைசிறந்த நாவலாசிரியர்களில் ஒருவராகும் தரமாகவும் சுவையுடனும் சிறப்பாக எழுதும் அவர், மால்குடி என்ற கற்பனையூரை சிருஷ்டித்துக் கொண்டு தம்முடைய கதைகளை விவரிக்கிறார்”, என்று லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியப் பேராசிரியராகப் பணியாற்றும் பேராசிரியர் நார்மன் ஜஃபர்ஸ் 21--12--66 அன்று கூறினார்.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகம் ஒன்றில் 1964-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதல்முதலாக நடந்த காமன்வெல்த் இலக்கிய மகாநாட்டில் திரு. ஆர். கே. நாராயணனும் வேறு சில இந்திய எழுத்தாளர்களும் கலந்து கொண்டார்கள்.

லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் பிரிட்டிஷ் மாணவர்களைத் தவிர 90 நாடுகளைச் சேர்ந்த சுமார் 900 மாணவர்கள் பயிலுகிறார்கள். இங்கு பயிலும் இந்திய மாணவர்களுடைய எண்ணிக்கை 140.

"கலைஞன்" கண்ட மலர்

★

-: வி. ஜி, சீனிவாசன் :-

"மலரே! மலரே! என்மனம் மலர
மலரும் மலரே! மலம்செறி மனமும்
நின்னைக் காண்புறில் நின்மலம் ஆகுமே!
மன்னிய பைந்தமிழ் மணம்கூர் மலரே!
துன்பப் பேயினைத் தொலைக்கும் பொருளே!
இன்பமே திரண்டோர் இன்னுரு எடுத்தது
என்னும் சிறப்புடன் எழில்கொளும் மலரே!
நின்னைக் காண்தொறும் நெஞ்சம் குதிகொள்
கின்றது! மகிழ்ச்சி துன்றிப் பொங்கித்
ததும்பு கின்றது! விதும்பலும் உற்றேன்.
உன்னை மேவி ஒருமுத் தம்கொள
என்னை நோக்கி இளநகை புரிதியோ?
மெல்லிய மலரே! விளம்புதி
புல்லறி வாளனும் பொய்ம்மை யேற்கே."

'மலர்' பற்றிய இவ்வரிய பாடல் 'தனிப் பாசுரத் தொகை' எனும் செய்யுள் நூலிலிருந்து எடுத்தாளப் பட்டிருக்கின்றது. தனிப்பாசுரத் தொகையானது 'பரிதிமாற் கலைஞன்' இயற்றியது. 'கடவுள்' தொடங்கித் 'தொழில்' ஈறாக நாற்பது தனித் தலைப்புக்களிலே பதினான்கு வரிப் பாடல்களைக்கொண்டது. முதற் பதிப்பாகவும், முதற் பகுதியாகவும் 6-12-1889 அன்று வெளியிடப் பெற்றது. சென்னை தாம்ஸன் கம்பெனியார் 'மினர்வா' அச்சகத்தின் மூலமாகப் பதிப்பித்தது. விலை: அணா-4. ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. இம்மலர்ப் பாசுரம் ஐந்தாவது பாடலெனத் தொகை நூலில் மணம் வீசுகிறது; தமிழ் மணம் பரப்புகின்றது. கலைஞரின் எதனினும் சிறந்த தமிழ்க் காதலை 'மன்னிய பைந்தமிழ் மணங்கமழ் மலரே!' எனும் வரியானது மலர்த்திய வண்ணம் மணம் வழங்கி நிற்கும். ஐயமில்லை.

"These sonnets appeared in the *Jnana Bodhini*. a Tamil monthly, ably conducted by, Mr. M. S, Purnalingam Pillai, B.A., and are published in this book form by his kind permission and at the request of the author's friends. Sonnets in Tamil are a rare phenomenon, and the ideas embodied in these sonnets, not to say anything of their structure, are partly novel to the pure Tamil public .....This book of sonnets appears a pseudonym as the author believes that a name goes for much in a critic's estimate of a literary work and wishes that the world should take his production for it is worth and express its true opinion about it, unprejudiced or untrammelled by a name."

எனத் தமது Foreword-இலே கூறுகின்றார் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள். இம் முன்னுரை மூலமாக நாமும் செய்தி தெரிகின்றோமல்லவா?

இந்தத் தனிப்பாசுரத் தொகை நூல் தமிழருமை தெரிந்த நற்றமிழ்ப் புலவரான ஆங்கிலப் பெருந்தகை ஜி. யூ. போப் அவர்கள் கண்ணிலே பட்டது. அருந்தமிழ் செய்யுட்களின் அழகும் ஆழமும் அமைப்பும் கண்டு வியந்தார். உளமாரப் பாராட்டி உவந்தார். தாம் மொழி பெயர்த்து, மூலத்தோடும் அரிய பல குறிப்புக்களோடும் செம்மை சான்ற செய்திகளோடும், வெளியிட்ட திருவாசகப் பெரும் பதிப்பின் அறிமுகவுரையிலே இவ்வாறு எழுதினார்.

"I am afraid I cannot recall more than two recent works which seem to me to give promise of a veritable re-descent in modern attire of the Tamil Sarasvathi.

The distinguished author of Manonmaniyam *P. Sundaram Pillai*, has—too early for us—passed into the unseen.

The little anonymous volume—a first instalment—entitled 'Tani-pacura-togai' seems to herald the advent of a new school to be heartily welcomed."

பின்னர், அடிக்குறிப்பாகச் சேர்த்து,

"The author's name is now given. The verses are by V. G. Suryanarayana Sastriar, B.A.,

Head Tamil Pandit of the Madras Christian College",

என்றெழுதினார்.

நூலின் கண் உள்ள பாடல்களை எல்லாம் ஆங்கில மொழியிலே பெயர்த்துத் தமிழ்க் 'கலைஞரு'க்கு அனுப்பி வைத்தார்கள்.

கலைஞரின் மலர்ச் செய்யுள் போப்பையர் அவர்களால் இவ்வாறு பெயர்க்கப்பட்டது.

"O FLOWER, fair FLOWER, whose tender leaves expand!
My heart expands too, holy thoughts arise;
Fancies impure fade from my gazing eyes.
Breather of fragrance over this Tamil land,
No griefs thy voiceless pleading can withstand;
'Who clothed me thus my every want supplies,
And naught of gladness to my life denies'.—
My soul upsprings touched by enchanter's wand!
Sweet daughter of the earth, fair mistress mine!
I deem thow woo'st me with thy gentle smile.
Thow draw'st my lips to thee with subtle wile.
Ah yes! I joy in thee; my heart is thine.
All softest, tenderest thoughts with thee are born;
Nor do thow, gentle flower, thy lover scorn!

தவிரத் தம்முடைய 'Preface to the Tamil echoes' எனும் பகுதியிலே, "The Tamil poems are generally very musical, and have considerable artistic finish, while the sentiment is interesting, and forcibly expressed. The English echoes are not, strictly speaking, translations, but rather adaptations, though some of them follow very closely the Tamil text." என எழுதினார். 1—7—1901 ஆக்ஸ்போர்டிலிருந்து எழுதியனுப்பிய இம்முன்னுரையிலே, 'The writer asks indulgence for his versions. He never imagined himself a poet. The Tamil verses cannot fail to be admired, while both they and the echoes hope for a kindly and considerable criticism" என எழுதி முடித்தார்.

கலைஞரின் தமிழ் மலர்ப் பாடலைப் படித்துப் பார்த்துவிட்டுப் போப்பையரின் Flowers-ஐப் படிப்போருக்கு வேறுபாடு தோன்றாமலிராது.

1-8-1901-இல் கலைஞர் தமது தனிப் பாசுரத் தொகையின் இரண்டாம் பதிப்பை வெளிக் கொணர்ந்தார். அதன் முகவுரையிலே இவ்வாறு குறிக்கின்றார். "ஆங்கில நாட்டிற் கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தும் கனம் பொருந்திய ஜி. யூ. போப்பையர் அவர்கள் இதனைப் பற்றி வியந்து பேசி இந்நூற் பாசுரங்களனைத்தையும் ஓராற்றான் ஆங்கில பாஷையில் மொழி பெயர்த்து அனுப்பினார்கள். அவர்தங் கருணைத் திறத்திற்கு யாஞ்செய்யக் கடவ கைமாறென்னே! இஃதுணர்ந்த நண்பர் யாவரும் இந்நூலை இவ்வாங்கில மொழிபெயர்ப்புடனுஞ் சேர்த்து அச்சிடுதல் வேண்டுமென்றனர். அவ்வாறே அச்சிடப் புகுந்த யாம் இதன் கணுள்ள பாசுரங்களனைத்தையும் ஒழுங்குபடுத்தி முறைப்பட வைத்தனம். அங்ஙனம் வைப்புழிப் பின்னர்த் தோன்றிய கருத்துக்களுக்கேற்பச் சிற்சில விடங்களில் மாற்றியும் மொழிபெயர்ப்பாசிரியர் கூற்றுக்கிணங்க சிலவற்றை யியைத்து மிருக்கின்றோம். இவையே முதற்பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்குமுள்ள வேறுபாடு"

ஒழுங்குபடுத்தி முறைப்பட வைத்தபோது, முதற்பதிப்பிலே ஐந்தாவது இடம் கொண்ட 'மலர்', இரண்டாவது பதிப்பிலே முப்பத்தைந்தாவது இடத்தைப் பெற்றது. தவிரவும், மொழிபெயர்ப்பாசிரியரின் கூற்றுக்கிணங்க சில கருத்துக்களை இயைத்தும் எழுதினார். இரண்டாவது பதிப்பில் வந்த 'மலர்' உருவம் காண்போம்.

"மலரே! மலரே! என்மனம் மலர
மலரும் மலரே! மலம்செறி மனமும்
நின்னைக் காண்புறில் நின்மலம் ஆகுமே!
'பைந்தமிழ் நாடெலாம் பனிமணம் உயிர்ப்போய்!
'என்னைப் படைத்தான் என்விழை வளிப்பான்!
இன்பப் பொருளொன்றும் இல்லைஎன்னான்' எனத்
துன்பப் பேயினைத் தொலைத்தறி வுறுப்பை.
நின்னைக் காண்தொறும் என்உயிர் குதிகொளும்;
நிலத்தின் மகளே! நேசத் தலைவியே!
என்னை நோக்கி இளநகை புரிதியோ?
உன்னை மேவி ஒருமுத்தம் கொள்வல்.
நின்னில் அளித்தேன்; நின்னதே என்னுளம்.
பேணுமின். எணம்நினில் பிறந்த; நின்
அன்பனை இகழேல் அமைந்தமென் மலரே!"

எப்படி? இந்த நிகழ்ச்சியிலிருந்து ஒன்று தெரிகிறோம். தமிழருமையை எங்கு கண்டாலும் போற்றுகின்ற ஆங்கில ஐயரின் பண்பு; அந்த ஆங்கிலவரின் 'எதிரொலி'க் கிணங்கத் தமது செய்யுள் வரிகளையும் மாற்றியமைத்து இசைக்கும் தமிழ்க் கலைஞரின் பரந்த உள்ளம். வரலாறு தெரிவோர் உவகை கொள்வர்!

தமிழரின் இரு வகை 'மலர்'ப் பாடல்களையும், ஆங்கிலவரின் ஒரு வகைப் பாடலையும் படிக்கக் கொடுத்து வைத்துள்ளோம் நாம்.

———

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்

★

"ஜகன்"

தெள்ளமுதை வானமகள் வழங்க—அங்கே
தேமணக்கும் கானைமிசை முழங்க—இன்பம்
வெள்ளமெனத் துள்ளிவர
அள்ளி யள்ளிக் கொள்ளுமென
பள்ளிசைத்து உள்ளம்வர வேற்கும்—தமிழ்ப்
பாவலரைக் கண்டுகலி தீர்க்கும்!

வேறு

தென்றலெனும் தீங்குயிலாள்
தேடி வந்து மாலையிட்டு
ஒன்றியென துயிர்கலந்த நேரம்—இந்த
உலகமென்றன் காலடியின் ஒரம்—சிறு
குன்றிமணி யாய்க்குறுகி
நின்றிருக்கத் தென் பொதிகைக்
குன்றில் வளர் தெய்வமகள் நெருக்கம்—கவிதை
கொண்டுவந்து குலவுமின்பப் பெருக்கம்

வேறு

தன்னை மறந்தலயந்
தன்னி லிருந்த என்முன்
கன்னங்கரியதொரு உருவம்—பெரும்
காரிருளாய்ப் படர்ந்து விரியும்—அது
கன்னலருஞ் சுவையுட்
பின்னிக்கிடந்த உயிர்
தன்னைப் பறிக்கவந்த கூற்றம்—என்னே
சற்று நொடியிலொரு மாற்றம்

வேறு

சுற்றி எட்டுத் திக்குமுற்றும் பார்த்தேன்—அந்தச்
சூழ்நிலையில் சற்றுடலம் வேர்த்தேன்—அங்கே
வெற்றியெட்டுத் திக்குமெட்டக்
கொட்டுகவி வார் முரசக்
கட்டழகன் வந்துதுணை நின்றான் நெஞ்சம்
கலங்குவதேன் பாண்டிய! நீ என்றான்!

காலனேயென் காலருகே வாடா—என்றன்
கால்களால் மிதித்துதைப்பேன் மூடா!—அந்த
ஆலமுண்ட நீலகண்டன்
பாலனுண்டு வேலு முண்டு
கால கண்ட னேயொழிந்து போடா—வேல்
கைக்கணையை நீ மறந்ததேடா?

வேறு

என்று வானிடிக்கும் அந்த
எக்காள முழக்கம் கேட்டுக்
கொன்றிட வந்த கூற்றக்
கொடியவன் எருமை மாட்டுக்
குன்றின்மீ தேறிச் சென்றான்!
குளிர்ந்த என் இதயம் வாழ்த்தி
நன்றியைப் பெருக்க யானும்
நாயகன் முகத்தைப் பார்த்தேன்!

முறுக்கிமே ரேற்றி விட்ட
மீசையும் முத்தமிழ்ப் பண்
தெறித்திடும் செவ்வாய் வீரம்
திளைத்திரும் தீக்கண்! வெட்டிப்
பறித்திடும் பார்வை நெற்றி
படர்ந்ததாம் அறிவுச் செந்தீ!
கிறக்குமெய்த் தெளிவு 'ஞானச்
சிகரம்' போல் இலகும் பாகை!

தோளினைத் தட்டித் "தம்பி!
துரத்தடா அச்சம்! வீர
வாளினை எடடா! நெஞ்சில்
வைரத்தை ஏற்றடா! தீக்
கோளினை நொறுக்கடா! இக்
குவலயம் என்றும் நல்ல
ஆள்வினை யுடையார் பக்கம்
அசைந்திரும் சாயும்" என்றான்

சித்தத்தில் இன்பம் வார்க்கும்
திருமகள் தெய்வத் தென்றல்
தித்திக்கத் தோன்றும் அந்தத்
தென்திசைக் கதிபன், நம்மைக்
கொத்திக் கொன் றுயிர் குடிக்கும்
கூற்றுவன் ஆவான் என்றான்
"எத்திக்கை நோக்கினாலும்
இது வேதான் நிலைமை" என்றான்!

தென்மேற்குப் பக்கம் சற்றே
திரும்பினேன்! கருப்பர் நாட்டில்
சன்மார்க்க நெறியினின்றும்
சறுக்கிடும் வெள்ளைக் கூட்டம்
புன்மார்க்க நிற பேதத்தைப்
புகுத்தியே வெறியைத் தூண்டும்
துன் மார்க்கப் பேயாட்டத்தின்
தொல்லைக்கோர் எல்லை இல்லை!

கொடுமைகள் இழைப்பதொன்றே
கொள்கையென் றேற்றுக் கொண்ட
மடமையின் ஆதிக்கத்தை
மற்றொரு பக்கம் கண்டேன்!
அடிமையென் றலகி லின்னும்
அவதியுற் றல்லற்பட்டு
விடுதலை முரசு கொட்டும்
வீரத்தைக் கிழக்கே கண்டேன்!

போர் வெறிக் கூட்டிற் சேராப்
புதுமை சேர் வழியில் வெற்றித்
தாரணித் தலைமை தாங்கும்
தனிப்பெருந் தாயகத்தின்
நேரெதிர்ப் புரட்டும் பொய்யும்
நீடிய காழ்ப்பும் காட்டும்
சோரரை இமயக் கோட்டின்
எல்லையில் துவளக் கண்டேன் !

அறங்கெட ஆண்மை வீழ
அச்சமே மிச்சமாக
உறங்கிடும் இருட்குகைக்குள்
ஒளிக்கதிர் உதயம் என்னப்
பிறங்கிடும் புதிய வாழ்வின்
பிறப்பிடம் ஒன்றும் கண்டேன் !
திறம்படு செய்கையெல்லாம்
செம்மையில் நிறையக் கண்டேன் !

வேறு

நீதிக்கும் நேர்மைக்கும் சோதனை ! காத்திட
நித்தமும் வேதனை எத்தனையோ ?
சாதிக்குள் சாதிகள் மோதிடும் பூசல்கள்
சண்டை சழக்குகள் எத்தனையோ
வாதுக்கும் வம்புக்கும் வட்டியிட்டுத் தினம்
பேதிக்கும் பித்தர்கள் எத்தனையோ ?
ஆதிக்க வேட்கையை நீடிக்கவே அணுச்
சோதிக்கும் தீமைகள் எத்தனையோ ?

சொல்லரிதாகிய சூழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும்
சூதுக்கும் வாதுக்கும் கோட்டை கட்டும்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்தே இன்பப்
பூமணம் காத்திட வீர்த்தெழுந்தே
வில்லினை எடடா ! என் தோழனே வீரனே
வேங்கை ப்புலியெனப் பாய்ந்திடடா !
நல்லணுக் கூட்டினைக் கொல்லணு வாக்கிடும்
நாசத்தை வீழ்த்தி நலம் புரிவோம்.

சாதிநிறக் கொடுங் கொத்தடிமைத் தனம்
சாய்த்திடத் துள்ளிவருகுது வேல் !
நீதிக்கும் நேர்மைக்கும் கைகொடுப்போம் இனி
நித்தியம் சேர்ந்ததைக் காத்திடுவோம் !
தீதுக்கும் வாதுக்கும் செப்படி வித்தைக்கும்
சிந்தை பணிந்திடும் கீழ்மையினால்
வேதிக்கும் நெஞ்சு பொறுக்கு தில்லை ! இந்த
வேதனைப் புன்மர வேரறுப்போம் !

வேறு

சத்தியம் தழைத்துலகில் சாந்தி நிலையாக
தாரணியில் யாவருமோர் சோதரரேயாக
எத்துகளும் போர்வெறியும் இனவெறியும் சாக
என்றென்றும் மானிடர்க்குப் பணிபுரிவோமாக !

வேறு

அமைதி நிலவும் உலகு சமைய
அறமும் திறமும் பெருக
அணுவி னளவும் துயர்கொள்வினைகள்
அணுகி வளரா தொழிய
இமையும் விழியம் துளியும் அயரா
திளமை யொளிதான் சுடர
எழில்கொள் தொழிலும் கலையும் வளர
இனிய பணிகள் புரியச்

வேறு

சென்றிடு ; ஈரெட்டுத் திக்கும், திரு நிறைந்த
மன்றில் வளர்கலைகள் மாண்பனைத்தும் தேர்ந்திடுக!
சேலம் உருக்காலை சேது சமுத்திரத்தில்
பாலமொடு ஆழ்கடலிற் பாய்ந்தோடும் கப்பலுக்குக்
கால்வாயும் துங்கக் கவிஞர் துறைமுகமும்
சீலமுறத் தோன்றிச் சிறந்து பொலிவுதர
நற்கலைஞர் நட்பும் நயஞ்சால் அவர் திறமும்
கற்றுத் தெளிந்திடவும் காவியங்கள் ஆய்ந்திடவும்
சென்றிடு ஈரெட்டுத் திக்கும் ! திறல் மிகுந்த
கன்னிக்குமரி முதல் காளித்தாய்க் கூட்டம் வரை
பன்னெடுங் காதம் பரந்த கடல் முழுதும்
மூழ்கி ஒளி வீசும் முத்தெடுத்து வானகத்தை
ஆழ்கடல்கள் மற்றும் ஆகாய வீதியிலும்
சென்று பரப்பிடுக ! செல்வம் பெருக்கிடுக !
ஆக்கப் பணிக்கே அணுசக்தி என்ற பெரு
நோக்கில் உலகுயர நுண்ணரிய அண்டங்கள்
யாவும் அயல் வீடாய் ஆகும்படிக்குயரத்
தாவும் விஞ்ஞானம் தன்னைப் பயில் வதற்குச்
சென்றிடுக ஈரெட்டுத் திக்கும் ! எனினும் யான்
ஒன்றை ஒளிக்காமல் உரைத்திடுவேன்
கேட்டருள்க
‘கீலரை’த் தேட வேண்டாம் !
கீழ்மகள் கற்பும் வேண்டாம் !
ஞாலத்தின் நாகரீக
நயமெனில் “பிறந்த மேனிக்
கோலமே!” என்று காட்டும்
கொள்கையைப் புகுத்த வேண்டாம்
டாலரைத் தொழுதல் வேண்டாம்
தலைக்கு மேல் வெள்ளம் வேண்டாம்!
உடற்கூறு வனப்பின் பேரால்
ஒய்யாரக் களிகாமப் பெண்
படங்களைக் கொணர்ந்து நாட்டின்
பண்பினைக் கெடுக்க வேண்டாம்
நடனமும் இரவு ராணி
நாடக முறையும் வேண்டாம்
கொடுமையோ கொடுமை யென்று
கூச்சலும் போட வேண்டாம் !

வேறு

சென்றிடும்பல திக்குகள் எங்கணும்
தேவி பாரத அன்னை புகழினை
நன்று நாட்டிடும் சிந்தனை ஒன்றுடன்
நாமவட்குறு நற்பணியாற்றுதல்
ஒன்றுதான் சொல்லும் நன்றியதாம் ! இந்த
உணர்வு தூண்ட விழித்திங்கு நோக்கிட
நின்ற பாரதி ஒன்றி நிறைந்தனன் !
நீவிரே தெய்வ மாக விளங்கினீர் ! — வணக்கம்.

நன்றி.

தமிழகத்திற்கு முற்றிலும் நம்பகமானதொரு சரக்குப் போக்குவரத்து நிறுவனம்

★

ABT
பார்சல் சர்வீஸ்

டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர்.

தந்தி: "சஞ்சீவி" டெலக்ஸ்: 262 போன்: 23366 (3 லைன்)

தாமதிக்காது விரைந்து வந்து
குறித்த காலத்தில்
உரிய இடத்தில்
உங்கள் சரக்குகளைச்
சேர்ப்பிக்கின்றன.

ABT/OSR

கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்

பதிவு அலுவலகம் : கரூர்

பொன்விழா 1916-1966

உங்கள் முதலீட்டுக்கும், சேமிப்புக்கும் கவர்ச்சிக்கரமான வட்டி வழங்குகிறோம்.

பிக்சட் டிபாசிட்டுகள் :	6	மாதம்	6 %
	1	வருடம்	$6\frac{1}{2}\%$
	2	,,	$6\frac{3}{4}\%$
	5	,,	$7\frac{1}{4}\%$
	7	,,	$7\frac{1}{2}\%$
சேவிங்ஸ் கணக்குகளுக்கு :			$4\frac{1}{4}\%$

மாதாந்திர சேமிப்பு கணக்கு :

12 அல்லது 24 மாத தவணை	7 %
36, 48 ,, 60 ,,	$7\frac{1}{2}\%$

தமிழகமெங்கும் 45 கிளைகள் உள்ளன

விவரங்களுக்கு அருகில் உள்ள கிளையில் தயவு செய்து விசாரியுங்கள்.

கரூர்
1—11—66 }

C. ராமனாத செட்டி,
செக்ரடரி.

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு (வரையறுக்கப்பட்டது)

எண். 178

—: கிளைகள் :—

கரூர், அரியலூர், துறையூர், மணப்பாறை, லால்குடி, பெரம்பலூர்; தில்லைநகர் (திருச்சி)

தலைவர் :

திரு. பா. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள், பி.ஏ.,பி.எல்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.	1,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	57,36,900
வைப்புகளும் நிதிகளும்	2,38,14,397
நடைமுறை மூலதனம்	5,29,01,886

திரந்தர வைப்புகளுக்கு 5% முதல் $7\frac{1}{2}$ வீதம் தவணை காலத்திற்கேற்றவாறு வட்டி வழங்கப்படும்.

சேமிப்புக் கணக்கிற்கு தினசரி நிலுவைபேரில் ரூ. 25000/-வரை 4% வட்டி விகிதம் வழங்கப்படும்.

மற்ற விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

வெ. முருகேசன்,
செயலாளர்.

தியாகியாக வேண்டுமா?

★

ப. கோபாலன்

“ஆறுவதுசினம்” இளமையில் கற்றபாடம். இதன் பொருள் இதுவரை தெரியாமலிருந்தேன். சினத்தை சீக்கிரத்திலே தணித்துவிடு என்பது இதன் பொருள். சீக்கிரம் தணியக்கூடிய சினத்தை போற்றிக் காப்பவன் மூடன். சினம் வரும்பொழுது நம் முகத்தை நாம் கண்ணாடியில் பார்த்தால் அதன் பயங்கரம் நமக்குத் தெரியும். நமக்கே பார்க்க சகிக்காது.

கோபம் ஏன் வருகிறது? மனிதன் உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாத தோல்வி மனப்பான்மை மனதில் தோன்றும் பொழுது அந்தத் தோல்வியே கோபமாக வெடிக்கிறது. கோபம் வந்தவுடன் பேசாமலிருக்க முயற்சி செய்யவேண்டும். முடியாவிட்டால் குளிர்ந்த நீரிலே ஒரு தடவை குளித்து விடவேண்டும்.

‘கோபம்’ பிறர் நம்மை அறியாமலோ, தவறாகவோ அல்லது ஏமாற்றும் எண்ணத்திலோ செய்திருக்கலாம். அறியாமையால் நிலைகெட்டு செய்த காரியத்தை மன்னிக்கலாம். தவறையும் ஓரளவு திருத்தலாம். ஆனால் ஏமாற்றும் முறையோ? இப்படி மேற்சென்ன காரணங்கள்தானே கோபத்திற்கு மூலமாக உள்ளது. ஒரு கொலையாளி தன் எதிராளியை ஏதோ உணர்ச்சி வசப்பட்டுத்தானே கொலை செய்திருக்க முடியும். அப்படிப்பட்ட நிலைமைக்குப்பின் தான் திருந்த வழி இல்லையா? அதற்கு மரண தண்டனை என்று அறிந்திருந்தும் கோபத்திற்கு அடிமையானதால்தானே இந்தக் குற்றமும் செய்ய முற்படுகிறான். அப்படி சந்தர்ப்ப வசத்தால் செய்த குற்றத்தை மன்னித்து விட்டுவிட்டால் அவன் திருந்தி வாழ வழி உண்டே! அதே நேரத்தில் மன்னிப்பு உண்டு என்று அவன் பல கொலைகள் செய்யவும் நேரிடுமே என்று இரண்டு தரப்புக்கும் வக்கீலாக நம்மை ஆட்படுத்திக் கொள்ளலாமா? உலகில் சிலர் இரண்டு நிலைகளையும் கொண்டுள்ளவர்களாக இருக்கலாம். எல்லோருமே அப்படியிருப்பார்கள் என்ற கருத்துக் கொள்ளலாமா? அவன் திருந்தி பெரிய ஞானியாகவும் ஆக வழி உண்டல்லவா?

நாம் ஒரு செயலை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று மனதில் நினைத்து, அதே செயலை பிறர் இப்படித்தான் செய்வார்கள் என்று எண்ணி அது தவறாக செய்யப்பட்டால் உடனே அவர் மேல் சீறி விழலாமா? உங்கள் கற்பனை உள்ளம் அவருக்கும் இருந்தால் அவர் இக்கார்யத்தை செய்ய முற்படுவாரா? பலவித எண்ணங்களும், குணங்களும் உடையவர்கள்தானே மனித இனம். ஆதலால் உணர்ச்சி வசப்பட்டு அனாவசியமாக கோபம் கொள்ளலாமா? ஒரு மனிதன் தன்னால் இயலவில்லை தன் மேல் குற்றம் உள்ளது என்று நினைத்து கையாலாகாத நிலையில்தானே கோபத்திற்கு அடிமைப்படுகிறான். ஏன் வீணாக உடம்பையும், மனத்தையும் புண்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விவேகம் வரவேண்டாமா? சரி ‘மௌனம் ஸர்வார்த்தசாதகம்’ என்ற பழமொழிக்கேற்ப பேசாமல் சும்மாயிருத்தல் சுகம் என்றால் மேன்மேலும் எதிராளியைத் தவறுதல் செய்ய தூண்டும் முயற்சியை வளர்ப்பதற்து இடம் கொடுத்தாகவும் ஏற்படலாம். நமது நண்பன் நமக்குத் தெரியாமல் ஒரு செயலைச் செய்து விட்டான் என்று கோபப்படுவதைவிட அவனிடம் பரிவையும், நட்பையும் வளர்த்துக் கொண்டு சென்றால் அவன் தானே தன் தவற்றை உணர்ந்து தன்னை திருத்திக் கொண்டு நல்வழியில் செல்ல வழிவகுத்துக் கொள்ள முயற்சிப்பான். அல்லது தான் செய்ய நேர்ந்த தவற்றின் சூழ்நிலையை பிறருக்கு அறிவிப்பான். மௌனத்தைவிட புன்சிரிப்பினால் வெல்லலாம் கோபத்தை! கோபம் வரும்பொழுது மௌனமோ, புன்சிரிப்போ கைக்கொள்ள ஒருவன் முற்பட்டால், தீங்கு இழைப்பவனை, அதனின்றும் காப்பாற்ற முடியும் என்பதை உணரவேண்டும். அதனால் அவன் தன்னை தாழ்த்திக் கொண்டவனாக மாட்டான் ஒருநாளும். அதைப்பற்றி நன்றாக ஒவ்வொருவனும் சிந்திக்கத் தலைப்பட வேண்டும்.

ஒரு தாடிச் சாமியார் விதிவழியே வந்து கொண்டிருந்த பொழுது ஒரு சிறுவன் ‘தடியா’ என்றவுடன் அவனை பரிவுடன் அழைத்து அவனுக்கு சன்மானமாக இரண்டு அணா கொடுத்து, பின், தன் பின்னால் இன்னொருவர் வருகிறார் அவரையும் தடியா என்று கூப்பிடு, அவரும் இன்னும் நிறையத்தருவார் என்று கூறி சென்றார். பின்னால் வந்த தடியனை, சாமியாரின் வார்த்தையை நம்பி “தடியா” என்றவுடன் தடியன் சிறுவனை நன்றாக உதைத்து அவனிடமிருந்த காசுகளையும் பறித்துக் கொண்டு சென்ற கதையையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பிறரைத் திருத்துவது இதைப் போன்ற செயகையினால் முடியாதா? பிறரைத் தண்டிக்க நாம் அருகதையற்றவர். இறைவன் அவனை நல்வழிப்படுத்த வேண்டும் என்று முறையிட்டு விட்டு சும்மாயிருக்கக் கூடாதா?

பூவில்லாமல் காய்ப்பது மரமில்லை. ஆனால் பூ இல்லாமல் காய்க்கும் மரம் உள்ளது. அந்த மரத்தின் கிளைகள் மேல் நோக்கி சென்று பிறகு கீழ்இறங்கி வந்து தாய் மரத்திற்கு விழுதாகி அந்த மூலமரத்தைத் தாங்கும் இயல்புடையதாக உள்ளது ஆலமரம். நாமும் அப்படித்தான். நாம் நம் உணர்ச்சிகளை மேல் நோக்கி பரவவிடுகிறோம். ஆனால் ஆலமரத்தைப் போல நம் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி வாழ நினைத்தால் நம் மூலமாகிய தேகத்தினை காக்க விழுதாக உணர்ச்சிகள் கட்டுப்பட்டு நம்மை மேன்மேலும் நல்ல வாழ்க்கை நடத்த வழிவகுக்கும் நாம் ஆலமரம் போல் வாழ

வேண்டும். இந்த உணர்ச்சிகளில் கோபம் நம்மை ஆட்கொண்டு விட்டாலோ அழிவுதானே? ஜகதீச சந்த்ரவஸு "நாடியிலே அதிர்ச்சியால் மரணம்" என்கிறார். கோபப்பட்டால் முகம் கோரமாகி இரத்த அழுத்தம் அதிகமாகி நமது நரம்புகள் புடைத்து சில சமயம் அவை மூக்கினாலும் வாயாலும் வரும். கண்களும் சிவக்கும். இதை அறிய வேண்டாமா?

தான்பெற்ற பிள்ளை ஒரு சிறுதவறுதல் செய்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அதற்காக அவனைக் கடிந்து கொள்வதற்கு முன், அச்சூழ்நிலையை உருவாக்கிய காரணம் யாது என்பதை ஆராயவேண்டாமா? பள்ளி ஆசிரியர் ஒருவர். பொடி போடாதே கெட்ட பழக்கம் என்று மாணவர்களுக்கு அறிவித்து விட்டு அவர் உடனே, மாணவர்கள் முன்னிலையிலேயே பொடி போட்டால், மாணாக்கனும் இது நமக்குள்ள நீதியல்ல என்று கருதி அவனும் இந்த வழக்கத்தைக் கடைப்பிடிக்க ஏதுவாகாதா? சொல்லுவதற்கு எல்லோர்க்கும் சுலபம்தான் ஆனால் சொன்னபடி செயல் புரிவது மிகவும் கடினம். சொல்லுவதை செயலாகச் செய்யும் மனப்பாங்கை மனிதன் கைக்கொள்ளவேண்டும். அதைவிடுத்து கோபத்தை அடக்கு என்று கோபக்காரனுக்கு "புத்திமட்டு" என்று சொல்லி தன் மகன் திருடினான் என்று அவனைத் தண்டிப்பதை விட திருடும் இயல்புக்குக் காரணமானவருள் தானும் ஒருவன் என்று கோபத்தை அடக்கி அவனை திருத்த வேறு மார்க்கம் தேடலாமல்லவா?

கோபத்தினால்தான் சுகமும், சந்தோஷமும் கெடுகின்றது என்று அறிந்து கோபத்தை அறவே ஒழிக்க வேண்டும், கோபம் ஒழிந்தால் பகைஒழியும். பகை ஒழிந்தால் ஆசைஒழியும். ஆசை ஒழிந்தால் உணர்ச்சி ஒழியும். உணர்ச்சி ஒழிந்தால் மனம் அமைதிபெறும். மனம் அமைதி பெற்றால் ஆத்மப்ரகாசம் ஏற்படும் என்பதை நாம் அறிய வேண்டும். அதை விடுத்து கோபத்திற்கு ஆளானால்? கெடுதி விளையும்.

இதைப் பற்றி சிந்தித்தால் கோபத்தை அடக்கிக் கொள்ளவேண்டும் என்ற நிலைக்கு மனிதன் மாறலாம். அடுத்தகணம் கோபம் வந்தால்! நாய் ஒரு எச்சிலுக்காக பல நாய்களுடன் சண்டை போட்டு தோல்வியுற்று, விவேகமடைந்து இனி எச்சில் இலை விழுந்தாலும்தான் தொடுவதில்லை என்று சோர்ந்து படுத்திருக்கும்போது, மறு எச்சில் இலை விழுந்து விட்டாலோ நாய், தான் முன் நினைத்த எண்ணத்திலிருந்து விலகி, எச்சிலைக்கு ஓடும். இதைப் போல் மனித இனத்தில் பெரும்பாலோர் இருந்து வருகின்றனர். ஆனால் நாய் மனித இனத்தைவிட மேலாக உள்ளது நன்றிக் கடன் செலுத்துவதில். ஆதலால் எச்சில் இலை நாயைப் போல் தானே பிரதிக்ஞை செய்து உடன் திரும்பவும் பழைய உணர்ச்சியான கோபத்திற்கு இடம் கொடுப்பவர்களுக்கு,

பாரதி கூறுகிறார் :

" கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி யுண்டாம்
கொடுங்கோபம் பேரதிர்ச்சி ; சிறியகோபம்
ஆபத்தாம், அதிர்ச்சியிலே சிறியதாகும் "

என்று. கொடுங்கோபம் பேரதிர்ச்சி உண்டுபண்ணி மனிதனை சொல்லாமல் உடன் கொன்றுவிடும். சிறிய சிறிய விஷயங்களுக்கு உண்டாகும் கோபம் க்ஷயரோகம் போன்றது. க்ஷயரோகமும், ஆஸ்துமாவும் சொல்லாமல் கொல்லும் வியாதி. அதே போல்தானே இந்தக் கோபமும், மேற்சொன்ன இருவியாதிக்கும் சிறிது காலம் தடைபடுத்த ஆராய்ச்சி நடக்கிறது. க்ஷயத்தை அறவே தீர்க்கவும் முற்பட்ட நிபுணர்கள் ஆஸ்துமாவை பூரணகுணம் செய்ய முடியவில்லை. ஆனால் இரண்டும் திரும்பவும் வரவழியுண்டு. அதே போல்தான் கோபமும் என்று சொன்னால் அது மிகையல்ல. மேலும் கூறுகிறார்.

" சினங்கொள்வார் தமைத்தாமே தீயாற்சுட்டுச்
செத்திடுவாரொப்பாவார்; சினங்கொள்வார்தாம்
மனங்கொன்று தங்கழுத்தைத் தாமேவெய்ய
வாள்கொண்டு கிழித்திடுவோர் மானுவராம்''

கோபமானது ஆயுளைக் குறைக்கும் என்றும் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும் என்றும் கூறி தினம் நூற்றுக்கும் மேற்பட்ட முறையில் கோபம் கொண்டு அதை கவலையாகக் கொண்டு துன்பத்திற்கு ஆர்பட்டு இறப்பார். அதைக் களைய வழி ஒன்றுண்டு. நம்மை படைத்தவன் இறைவன் அவன் வழி நல்வழி என்று மேற்கொண்டு ஏன் கோபத்தை விடக்கூடாது.

"வேகாத மனங் கொண்டு களித்து வாழ்வீர்
மேதினியிலேது வந்தாலெமக் கென்னென்றே".

என்று நம்மை படைத்தவன் காப்பான். இது அவன் திருவிளையாடல் என்று நினைத்து ஏன் நாம் நம் மனதை பக்குவப்படுத்திக் கொள்ளக்கூடாது என்கிறார். உண்மை தான். அதுமுடியுமா என்றால் முடியும். இறைவன் தன்னைப்படைத் தான் ஏதோ ஒரு நல்ல செயலுக்கு என்ற எண்ணம் இருந்தால் கோபம் வருமா?

அப்படி கோபத்தைத் தான் விட முடியாது என்ன செய்வது என்று கொண்டுள்ள நம் நண்பர்களை "தியாகிகளே! வருக!" என்று அழைப்பதில் என்ன தவறு இருக்கிறது? அவர்கள் தான் ஒரு சிறு தியாகம் கூட செய்யவில்லை. ஏன் நாட்டிற்காக ஏதாவது ஒரு நற்செயல் செய்து அன்னிய ஆதிக்கத்தில் சிறை கூட சென்றதில்லை. அப்படியிருக்க என்னை தியாகி என்றும் தியாகியே வருக என்றும் கூறுகிறீர்களே என்று கோபப்பட்டாலும் பரவாயில்லை. அவர்களும் தியாகிகள் தான், ஏன் என்றால் பிறர் மேல் உள்ள பரிவாலும், நட்பின் மிகையாலும், ஏக்கத்தாலும். தவற்றினாலும் ஏமாற்றத்தாலும், அறியாமையாலும் உணர்ச்சி வசப்பட்டு கோபம் கொண்டு தன் நாடிகளைத் தானே சிதற அடித்துக் கொண்டு தன் உயிரையே தியாகம் கொள்கிறார்களே, நாடித் தளர்ச்சியினால் மெய் தளர்ந்து உடல் சோர்ந்து, இரத்தம் தோய்ந்து, மனமுடைந்து சாவதற்கும் தன்னைத் தயார் படுத்திக் கொள்கிறார்களே. இவர்களை விடத் தியாகிகள் இவ்வுலகில் யார் உளர் கூறுங்கள். இப்படித் தன்னைத் தானே வெட்டி துண்டாக்கி இறைவன் பிரசன்னமாகாததால் கோபம் கொண்டு தன் தலையை வெட்டிக் கொள்ளத் தயாரான திரிசிரன் கதையும் சூரபதுமன்

கதையும் நமக்குத் தெரிந்தவைதானே? அப்படிப் பட்டவர்களுக்கு அரசாங்கம் 4 ஏககர் நிலம் நன்கொடையாக கொடுக்க முன்வந்தால் இந்த உலகத்திலுள்ள நிலங்களை பகிர்ந்துகொடுத்தும் எஞ்சியுள்ள தியாகிகளுக்கும் நிலம் கொடுக்காத நிலையில் தன் நிலையிழந்து கோபமும் ஆத்திரமும் கொண்டு அந்த அரசாங்கமே தியாகியாக மாறிவிடாதா? ஆதலால் கோபத்தை வென்று உலகிலே நற்தொண்டுகள் பல செய்ய நாம் பிறந்தோம் என்று நினைவிற் கொண்டு நற்பயன்களை நாட மனத்தை ஈடுபடுத்துதல் மனிதப் பண்பாடல்லவா?

அதை விடுத்து, மனித இனம் கோபம் கொண்டால் அது எவ்வளவு தூரம் தம்மையும் உலகத்தையும் பாதிக்கும் என்று சிந்திக்க வேண்டாமா? வேண்டாத பிரிவினாலும், ஏக்கத்தாலும், ஏமாற்றத்தாலும். அறியாமையாலும் நாடி தளர்ந்து இறந்து போனால் தியாகி நிலம் கிடைககுமா? சிந்தித்துப் பாருங்கள். பொறுமையாகிற பொன்னகையை, புன்னகையை அணிந்து கோபத்தை விடுத்து வாழ வழி வகுக்க முற்பட்டு விட்டால் மனித இனத்தினர் அனைவரும் ‘தியாகி’’கள் தானே, கோபத்தைவிட்டு தியாகம் செய்ய வாருங்கள் என்று அழைக்கிறேன்.

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், மதுரை-1.
தொலைபேசி எண் : 4023, 4024, 2134.
தந்தி : “சென்கோபாங்க்’’ - தபால்பெட்டி எண் : 14.
திரு. வ. அழகப்பன், B. B., B. L., தலைவர்.
கிளைகள்: திண்டுக்கல், தேனி, பழனி, கம்பம், திருமங்கலம் கொடைக்கானல், நிலக்கோட்டை, மேலூர், உசிலம்பட்டி, ஒட்டன்சத்திரம்.

விசேஷ கால வைப்புகள் (Season Deposits) 1½ சதவிகித முதல் 3 சதவிகித வட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

தவணை வைப்புகள் (Fixed Deposits) 3 மாதம் முதல் 84 மாதங்களுக்கு மேலும் 5½ சதவிகித முதல் 7½ சதவிகித வட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்பு கணக்கு வைப்புகள் (S.B.) காசோலை மூலம் (Cheque) நடத்திக்கொள்ளலாம். 12 வயதுக்கு மேற்பட்ட மைனர்கள் அவர்கள் பெயரில் கணக்குகள் வைத்து அவர்களே வரவு செலவு செய்யலாம். வட்டி 4 சதவிகிதம். வாரமொன்றுக்கு ரூ. 5000 வரை பணம் திரும்பப் பெறலாம்.

6½ சத விகித வட்டிக்கு ரிக்கரிங் டிபாசிட்டுகளும் 7 சத விகித கூட்டு வட்டிக்கு பிராவிடெண்ட் நிதி வைப்புகளும் மாதாந்திர தவணையில் பெற்றுக்கொள்ளப்படும்.

விபரத்திற்கு விண்ணப்பிக்கவும்.

S.N. ராஜமாணிக்கம், B.A., B.Com. (Hons.), C.A.I.I.B.,
காரியதரிசி.

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்,
மதுரை.

எங்களிடம் ஒரு சேமிப்புக் கணக்கு
(SAVINGS DEPOSIT ACCOUNT)
திறப்பதன் மூலம நான்குவித நன்மைகள் அடைகிறீர்கள்.

★ கணக்கு திறப்பதற்கு ரூ. 5/-ந்தே போதுமானது.

★ தினசரி இருப்பின் பேரில் ஆண்டு ஒன்றுக்கு 4½% வட்டி அளிக்கப்படுகின்றது.

★ வாரம் ஒன்றுக்கு அதிக பட்சம் ரூ. 5000/-வரை கணக்கிலிருந்து திரும்பப் பெறலாம்.

★ கணக்கிலிருந்து பணத்தை ஒரு மொத்தமாகவோ அல்லது பல தடவைகளிலோ பாங்க் வழங்கும் செக்குகள் மூலம் திரும்பப் பெறலாம்.

தென்னகத்தே
57 கிளைகள் பணிபுரிகின்றன.

கருமுத்து தியாகராசன், தலைவர்.
T. K. ராமசுப்பிரமணியம், காரியதரிசி.

பதிப்பக ஆரம்ப விழா!

இராமநாதபுரம், டிச. 31, இராமநாதபுரம் வெளிப்பட்டணம் “கவியரசன் பதிப்பகத் துவக்க விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் நடந்தேறின.

அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் ஸ்ரீ அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமை தாங்க, தவத்திரு காசிவாசி நடேசானந்தா சரஸ்வதி சுவாமிகள் துவக்கி வைத்தார்கள்.

ஸ்ரீமான்கள் நவனீத கிருஷ்ணன், இளங்கம்பன், ரா. சேதுராசன், மதியன், ஏ. சேதுராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பின்னர் செம்பொன்குடி கவிஞர் பாலகிருஷ்ணன், பழனி இளங்கம்பனின் ‘சிந்தனைக் கடல்’ கவிதைத் தொகுப்பையும், கவிஞர் சேதரசு எழுதிய “அழகே வா!” சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டு நூல்களின் தலைப்பையும், கருத்துக்களையும் பாராட்டிப் பேசினார்.

தலைவர் பேசும்பொழுது, எழுத்தாளர்கள் நல்ல இலக்கியங்களை உருவாக்க வேண்டும் என்றார்.

ஸ்ரீ இளங்கம்பனும், ஸ்ரீ சேதரசும் நன்றி உரை கூறினார்கள். கவியரசன் பதிப்பக உரிமையாளர் கவிஞர் வா. மு. சேதுராமன் நன்றி கூறினார்.

திருவாதிரை விழா

இராமநாதபுரம், சன: 9. இராமநாதபுரம் வெளிப்பட்டணம் பேரவையின் சார்பில் திருவாதிரை விழாவின் மையமாக பட்டிமன்றம் நடைபெற்றது அ. இ. தமிழ் எழுத்தாளர் பெருமன்றச் செயலாளர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் நடுவராகப் பொறுப்பேற்க, தொண்டர்கள் பெறுவது துன்பமா? இன்பமா? என்ற தலைப்பில் சுவையான பட்டி மண்டபம் நடந்தது.

தொண்டர்கள் பெறுவது துன்பமே! என்பதை வலியுறுத்தி திருவாளர்கள், இளங்கம்பன், க. சேதுராமலிங்கன், வன்றொண்டர் சங்கரன், கே. ஏ. முத்துச்சாமி ஆகியோரும், இன்பமே! என்பதை நிலைநாட்டி திருவாளர்கள் வ. கலியமூர்த்தி, வேணுகோபால் த. முத்துச்சாமி, கோபால் ஆகியோரும் வாதம் செய்தனர். இரு தரப்புக் கருத்துக்களையும் ஆராய்ந்த நடுவர், தொண்டர்கள் என்றும் துன்பமே பெறுவதில்லை என்று தீர்ப்பு வழங்கினார்.

இதற்கு முன்னர் பொன்னாடை போர்த்து விழா நடைபெற்றது. திரு. சாது அருள் ஜோதி சுவாமிகள் தலைமை தாங்கினார். அ. இ. தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளரும், எழுத்தாளன் பத்திரிகை ஆசிரியருமான திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் வெளிப்பட்டணம் சமயப் பேரவையின் சார்பில் தவத்திரு காசிவாசி நடேசானந்த சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். பல அமைப்புக்களின் சார்பிலும், தனிப்பட்டவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சுவாமிகள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

இரு துருவங்கள்

சேஷாத்திரி

பண்ணிட்ட கவிதையினில் பாடிவைத்தார்,
பாவலர்கள் புகழெல்லாம் தேடிவைத்தார்;
விண்ணிட்ட கோபுரங்கள் காணுதற்கும்,
வீற்றிருக்கும் வித்தகன் தாள் பேணுதற்கும்,
எண்ணிட்டு ஓர் நாளில் சென்றபோது
எதிர்பாரா நிலையங்கே நின்றதையா!
புண்ணிட்ட வேலாகத் தைத்தகாட்சி
பொலிவற்று நலிவுற்றோர் மொய்த்தகாட்சி!

“கைகளினைச் சேர்த்தறியான் கடவுள்” நல்ல
கவிதைவரி நினைவினிலே படரும் மெல்ல;
கைகளினை வாழ்வெல்லாம் சேர்த்துவைப்பார்;
“காசையா” என்பதொரு வார்த்தை வைப்பார்;
வைகறையின் எழில்காண வந்தநேரம்
வட்டமிட்டு வந்திறங்கும் அந்தகாரம்.
மெய்குழைந்து எண்ணிடவோ இறையின்மாட்சி?
மெய்குறைந்து புலம்பிடுவோர் கறையின்காட்சி!

ஆற்றினையே அன்னையென எண்ணிவந்தார்;
அன்போடு பூசனைகள் பண்ணிவந்தார்;
பேற்றினையே பெறுவதற்கு ஆசிவேண்டி
பின்னாளும் காசுபல வீசலுண்டு;
ஆற்றழகும் அதனோடு அன்னைமாரின்
அன்பழகும் காணவந்த என்னையங்கே,
ஆற்றரிய துயராற்றில் உய்த்ததையோ!
அக்கணமே களிப்பெல்லாம் பாழ்த்ததையா!

நாவளத்தால் நாமெல்லாம் பொய்யைக் கோத்து
நல்லதொரு மாலையெனச் செய்யக் கற்றோம்.
பாவளத்தால் சிறந்ததொரு நாட்டில் வந்த
பாமரர்கள் படுகின்ற பாட்டைக் கண்டேன்
கோவணத்துச் சிறுவர்பலர் வெள்ளந்தன்னில்
குளித்துவந்து காய்ந்தார்கள் கொள்ளி முன்னால்
சீவனத்துப் போராட்டம் வறுமை இன்னும்
சிந்தையது மறக்குதில்லை சிறுமைதன்னை!

நாட்டுக்கு நம் சேவை

பட்டுக்கோட்டை குமாரவேல்

நாட்டுக்கு சேவை செய்ய வேணும்
நாமெல்லாம் ஒன்றாய் சேர வேணும்
பாட்டுக்குப் புதல்வன் பாரதி போல்
பாரில்நம் புகழ் பாடவேணும்
ஆலைகள் சோலைகள் செழிக்க வேணும்
ஆணும் பெண்ணும் உழைக்க வேணும்
அவசர வேலைகள் செய்ய வேணும்
அரசையும் அவர்களே நடத்த வேணும்

போரிடா கொள்கையை வளர்க்க வேணும்
பொதுமையை வாழ்க்கையில் காட்ட வேணும்
வீட்டுக்கு ஒருவர் நாட்டைக் காக்க
வீர நடை போட்டு போக வேணும்
பாரினில் பெருமை அடைய வேணும்
பாருக்கு வழியைக் காட்ட வேணும்
பாரத மண்ணில் பகைவன் வந்தால்
பாரதப் போரும் நடத்த வேணும்

Ah, ye knights of the pen!
May honour be your shield,
and truth tip your lances!
Be gentle to all gentle people.
Be tender to children.

W. M. Thackeray

appreciable progress.
three Five Year P
have not succeeded
sufficient grain
So far

The Alind range includes:

ACSR • All – Aluminium conductors • Conductor accessories and tools • Covered aluminium conductors for indoor wiring and outdoor weather-proof applications and Solidal underground aluminium powercable • Also EC-grade aluminium rod made out of ingots and High-tensile galvanised steel wire

ALIND
where forward-thinking is a force of habit

THE ALUMINIUM INDUSTRIES LIMITED
India's largest manufacturers of aluminium conductors and accessories
Registered Office: Kundara (Kerala)
Plants : Kundara . Hirakud . Hyderabad
Managing Agents :
SESHASAYEE BROS. (TRAV.) PRIVATE LIMITED

AL/64/P.

அச்சுக்கூடங்களுக்குத் தேவையான
பலவித யந்திரங்களும் எம்மிடம் கிடைக்கும்.

பேப்பர் கட்டிங் மிஷின்



நவீன தேவைகளுக்கு ஒட்டிய வசதிகளுடன் தயாரிக்கப்பெற்றது.
வீல் ஸிஸ்டம் டயாகனல் கட்டிங் மூவ்மெண்ட், டபுள் கியரிங் டிரா ராட் ஆகிய
அமைப்புகள் கொண்டது.

இரண்டு இங்கிலீஷ் கத்திகள் உண்டு. 24" சைஸ்.

பாரதி, வள்ளுவர் தமிழ் எழுத்துக்கள்
விசேஷமானவை.

மதராஸ் டைப் பவுண்டரி

38, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

ஞாயிறு வாழி

கவிஞர் இளங்கம்பன்

வானங்கிழக்கில் வெளுத்திட—ஆம்
வந்தனன் செங்கதிர்ச் செல்வனே
மோனங்கலைத்தனன் சோர்வுடன்-பெரும்
மூச்சையகற்றிச் சிரித்தனன்
கானம்பிறந்திட எங்கணும்—புதுக்
காட்சிகள் கண்களுக்கீந்தனன் ;
பானையில் பாலதுபொங்கவே—இந்தப்
பாரை இன்பமதில் ஆழ்த்தினன்.

மண்வளம் நெல்லாய் மலர்ந்திட-கண்ட
மள்ளர்கள் உள்ளம் குளிர்ந்திட
பெண்முகம் நன்மலர் ஆகிட—அவர்
பேருளம்தாவி மகிழ்ந்திட
பண்ணுடன் கூத்தும் கலந்திட-இல்லில்
பற்பலவண்ணம் இழைந்திட
வண்ணமுறு பொங்கல் தந்தனன்—அந்த
வான்கதிர்த் தேவனை வாழ்த்துவோம்.

சீலநெறிகள் சிறந்திட—மக்கள்
செய்யறம் ஓங்கி வளர்ந்திட
கோலப் பேரொளி இலங்கிட—நம்
கோயில் குணங்கள் பொலிந்திட
பாலமுதத் தமிழ்ப்பாலர்கள்—வாயில்
பாகொழுகிச் சுவையூட்டிட—
ஞாலத்துயிர்கள்மகிழ்ந்திட—செய்த
ஞாயிறு வாழிய/ வாழிய/

நிலையான கவி பாட

திருச்சி பாரதன்

நிலையான கவிபாட
நெஞ்சத்தில் அமுதூர வைப்பான்
கலையான பெருவாழ்வு
கனிவோடு நமைநாடக் களிப்பான்
மலையான துயர்யாவும்
பொடியாகிப் பறந்தோட முடிப்பான்
விலையேது பொழில்சூழும்
வயலூரான் அருளுக்கே துதிப்போம்!

விசேஷ வேண்டுகோள்......

“வறட்சி, மழையின்மை, கொடும்பசி. மீண்டும் இவ்வருடம் கோடிக்கணக்கான நம் நாட்டு மக்களின் சுக வாழ்க்கு இடையூறு ஏற்பட்டிருக்கிறது. சில இடங்களில் உயிர் வாழ்வதே கடினமாக இருக்கிறது....

“பசியால் வாடி பற்றுக்குறையினால் பீடிக்கப்படும் நம் நாட்டு மக்களுக்கு பெருமளவில் உதவி புரியுங்கள். முடிந்தவரை உதவி செய்ய நான் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

“பணம், பொருள், தானியம், துணிமணிகள், எதுவானாலும் கொடையாக அளிக்கலாம். அனுப்பவேண்டிய விலாசம் :

பிரதம மந்திரியின் வறட்சி நிவாரண நிதி,
காபினட் செக்ரடேரியட், ராஷ்டிரபதி பவன்,
புதுடில்லி-4”

இந்திரா காந்தி
பிரதம மந்திரி

பிரதம மந்திரியின் வறட்சி நிவாரண நிதிக்கு தாராளமாக நன்கொடையளியுங்கள்.

DA—66/F 2

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press
24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor: T. L. Panchapakesan.